


# தென்னாடு

www.thennadu.org

வள்ளுவர் ஆண்டு 2051 வீறியெழல் ஆண்டு கும்பம் நல்லோரை மாசித்திங்கள், 15ம் நாள் (27.02.2021) நிறைமதி வெளியீடு +94 21 221 2739


## குடைச் சுவாமிகளின் குருபூசை தினம்



மாசித் திங்கள் கார்த்திகை நாண்மீன் தென்னாட்டில் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. சுவாமிக்கு குடநீராட்டு மற்றும் பூசைவழிபாடுகள் இடம்பெற்றன.

## அன்புருவாகிய சிவன் அழித்தற் கடவுளா, சிவனிடம் போனால் துன்பம் வருமா?

### பயத்தினை உருவாக்கி திட்டமிட்டு சைவம் அழிக்கப்படுகிறதா என்று எண்ணத்தோன்றுகிறது

சிவன் மூலவராய் இருக்கும் வரை தமிழன் பார் ஆண்டான், சிவனைச் சிறுதெய்வமாக்கி, சிவத்தினைக் கும்பிடுதல் பயம், அவர் அழிப்பார், வீட்டில் வைத்திருக்கல் ஆகாது, சிவனுடன் கவனமாய் இருக்கவேண்டும், மற்ற சுவாமிகள் மாதிரி இல்லை என்று திட்டமிட்டுப் பயம் ஏற்படுத்தித் தமிழரை பலமிழக்கச் செய்திருக்கிறார்கள். யாராவது உண்மையாக சிவத்தினை வழிபடும் சைவத்தமிழர்கள் இதனை சொன்னார்களா என்று பார்த்தால் உண்மை புரியும். திருவாசகமெனும் தேன் என்று கூறுவதற்கு அதனை அருள்விளங்கப் பாடி அனுபவித்திருக்க வேண்டும் அதுபோலவே சிவனைச் சிக்கெனப் பிடித்தவர்கள் தான் சிவனைப் பற்றிச் சொல்லவேண்டுமே தவிர, சிவனைக் கும்பிடாதவர்களோ அல்லது சிவத்தினை புத்தகத்தில் படித்தவர்களோ அல்ல.



மங்களநாதர் - உத்தரகோசமங்கை

அம்பாள் பூசை செய்தது காஞ்சிபுரம், முருகன் பூசை செய்தது திருமுருகன் பூண்டி, பிள்ளையார் பூசை செய்தது கணபதீச்சரம், பிரமா வணங்கியது பிரம்மபுரீசுவரம், இராமர் வணங்கியது இராமேசுவரம், கிருஷ்ணர் வணங்கியது சீர்காழி, பரசுராமர் பூசை செய்தது திருப்பாச்சூர், வாமணர் பூசை செய்தது திருமாணிக்குழி, மச்சன் பூசை செய்தது மச்சேசுவரம், கச்சன் பூசை செய்தது திருக்கச்சூர் இப்படியாக எல்லோரும் சிவனை வழிபட்டுத் தான் பலன் பெற்றனர்.

வாழ்த்துவதும் வானவர்கள் தாம்வாழ்வான் மனம்நின்பால்
தாழ்த்துவதும் தாம்உயர்ந்து தம்மை எல்லாந்தொழ வேண்டிச்
சூழ்த்துமது கரமுரலும் தாரோயை நாயடியேன்
பாழ்த்தபிறப்பு அறுத்திடுவான் யானும் உன்னைப் பரவுவனே

- திருச்சதகம்

இப்படி எல்லோரும் வழிபட்டு தாமே கடவுளாகி இருக்கையில், அப்படியான பரம் பொருளாகிய சிவத்திடம் நீங்கள் ஏன் அணுகக்கூடாது என்று சிந்தித்துப் பாருங்கள்.

எழுவகைப் பிறப்புக்களில் மாந்தர்களே பகுத்து ஆராயும் அறிவினை உடையவர்கள். பகுத்து ஆராயும் மாந்தர்க்கே, ஏன் இறைவனை வழிபட வேண்டும், ஏன் பூசனை இயற்ற வேண்டும் என்ற அறிவும் ஆராய்ச்சியும் உண்டு. தனக்கு உடலையும், தான் வாழுதற்கு இடமாகிய உலகையும், அவ்வுலகில் உயிரும் உடலும் குறிப்பிட்ட நாள் வரை நிலைபெறுவதற்குத் தேவையான ஐந்து பூதங்களையும், நுகர்ச்சிப் பொருள்களையும் ஆக்கித் தந்த வால் அறிவனாகிய இறைவனுக்கு நன்றி பாராட்டுதற்குச் சிறந்த வாய்ப்பு மாந்தப் பிறவியிலேயே கிட்டுகின்றது என்று சித்தாந்த மெய்கண்ட நூல்கள் குறிப்பிடுகின்றன. பெருமானின் அருள்வடிவாகத் தோன்றும் சிவலிங்கத் திருமேனிக்கு அன்புடன் பூசனை இயற்றுவது மாந்தப் பிறவியில் கிட்டும் அரிய பேறு என்றும் அவை குறிப்பிடுகின்றன.

(11ஆம் பக்கம் பார்க்க)



சிவனிரவு (சிவராத்திரி) என்பது ஒவ்வொரு திங்களும் (மாதமும்) வருகின்ற தேய்பிறை பதினான்மைப் பிறை (சதுர்த்தசி) நாளாகும். இது நிலவின் இயக்கத்தில் மறைமதி நாளுக்கு (அமாவாசைக்கு) முதல் நாள் விரதமிருந்து கொண்டாடப்படுகிறது. மாசிமாதத்தில் வருகின்ற சிவனிரவு மிகவும் சிறப்பானது அதனால் அது மகாசிவனிரவாகக் கடைப்பிடிக்கப்படுகிறது.

சிவனிரவுக்கான விளக்கங்கள் பல வகையாகவுள்ளன. சமய வழியில் ஒரு விளக்கம், அறிவியல், புராண, மருத்துவ மற்றும் வாழ்வியல் வழிகளில் பலவிளக்கங்கள் உண்டு. ஆனால் சைவத் தமிழனின் ஆழ்ந்த அறிவியலுக்கும் சமயநெறிக்கும் முழுமையான தொடர்புகள் உண்டு. அண்டத்தில் இருப்பதுதான் பிண்டத்திலும் இருக்கிறது என்ற அளப்பரிய கொள்கை விளக்கங்களை எமது சைவநெறி பலவிடத்தில் குறிப்பிட்டுக் காட்டுகிறது.

## “மகாசிவனிரவு” இம்முறை மாசித் திங்கள் 27ம் நாள் (மார்ச் 11) தேய்பிறை பதினான்மைப் பிறைநாளில் கொண்டாடப்படவிருக்கிறது

மனித மனத்தின் மாற்றமும் நிலவின் மாற்றமும் ஒன்றுடனொன்று தொடர்புபட்டது என்பது தமிழரின் ஆழ்ந்த அறிவியல். நிறைமதியில் இருந்து நிலவு மறைமதியாகும் போது மனதில் பல மாற்றங்கள் நடைபெறுகின்றன. மேலும் மறைமதி நாளில் (அமாவாசை) சொலுக்கேற்றாற் போல் மறை-மதி , மனதை மறைத்து, சிந்தனைத் திறனைக் குறைத்து பலவீனமாக்கும் தன்மைகளும் உண்டு. இதனாலே மறைமதிக்கு முன்னிரு நாட்களும் சிவபூசைக்குரிய கழுவாய் (13ம் நாள்) (பிரதோஷம்) மற்றும் சிவனிரவாகக் (14ம் நாள்) கடைப்பிடித்தனர் ஆதித்தமிழர்கள்.

மகாசிவனிரவிற்கு இரண்டு புராணக் கதைகள் உள்ளன. ஒன்று வேடன் ஒருவன் புலிக்குப் பயந்து மரத்துக்கு மேலே ஏறி அமர்ந்திருந்ததும், அது வில்வ மரம் என்பதும், தூக்கம் வராமல் இருக்க ஒவ்வொரு இலையாகப் பறித்து கீழே போட்டுக்கொண்டிருக்க, அது கீழே இருக்கும் சிவலிங்கத்தில் விழுந்ததனால், அவனுக்கு சிவனின் அருள் கிடைத்தது, அதுவே மகாசிவனிரவு எனக் கொண்டாடப்படுகிறது. மற்றது மாலும் அயனும் அடிமுடி தேடிய கதை. அடிமுடி தேடியவர்களுக்கு மாசித் திங்கள் தேய்பிறை பதினான்காம் நாள் திங்கட்கிழமை திருவோணம் கூடிய நன்னாளன்று திருக்காட்சி கொடுத்து மறைமதி அண்டிய நாளினால் மனம் குன்றி திருமுடியைக் கண்டதாகப் பொய் கூறிய பிரமனுக்குத் தண்டனையும் உண்மை கூறிய திருமாலுக்கு காத்தல் என்னும் அரும்பணியையும் கொடுத்தான் ஈசன் என்பதும் வெளிப்படை. இத்தினத்தில் பரமசிவன் மகேசுவராக மாறிக்காட்சி கொடுத்ததால் இந்த இரவு , மகாசிவனிரவாக மாறியது.

மாதம் தோறும் வரும் சிவனிரவில் நடுச்சாமம் (இரவு 12.00 மணி) வரை

(11ஆம் பக்கம் பார்க்க)

## இறைவன் கைப்பட தமிழில் எழுதிய திருவாசகத்தின் மூலப்பிரதி புதுச்சேரி மடத்தில்

## மகாசிவனிரவு அன்று அடியார்கள் பார்வைக்கு




மணிவாசகர் சொல்ல , சிவபெருமானே தமிழில் எழுதி அழகிய சிற்றம்பலமுடையான் என்று கையெழுத்திட்ட திருவாசகத்தின் மூலப்பிரதி புதுச்சேரி ஆதீனம் சிதம்பரம் பாதபூசை அம்பலத்தாடும் சுவாமிகள் திருமடத்தில் இருக்கின்றது. இதனை அடியார்கள் வருடந்தோறும் நடைபெறுகின்ற மகாசிவனிரவு அன்று சென்று பார்த்து வழிபடலாம்.

இறைவன் எழுதிய, கைச் சான்று அளித்த ஓலைச் சுவடியை யார் வைத்துக் கொள்வது என தில்லைவாழ் அந்தணர்களுக்குள் போட்டி வந்தது. அதனால் ஒரு ஓலையை ஒரு இலையில் வைத்து சிவகங்கையில் இட்டு அந்த இலை கரையில் இருக்கும் அந்தணர்களுக்குள் யாரை நோக்கி வருகிறதோ அவரே வைத்துக் கொள்ளலாம் என முடிவு செய்து குளத்தில் இட்டனர். ஆனால் ஓலையோ எளிய ஒரு பக்தரை நோக்கிச் சென்றது.

அவர் கோவிலின் வடக்கு வீதிக்கு அருகில், மடம் ஒன்றை நிறுவி, திருவாசகத்தினைப் பாதுகாப்பாக வைத்து பூசைசெய்து வந்தார். பின் முகமதியரின் தமிழ்நாட்டுப் படையெடுப்பின் போது, பாதுகாப்புக்காக அஞ்சி ஓலைகளைப் புதுச்சேரிக்கு அருகே மடம் ஒன்றை நிறுவி பாதுகாப்பாக வைத்துள்ளனர். மடம் அமைத்தது மற்றும் அங்கு நடைபெற்ற விழாக்கள் போன்ற செய்திகள், ஆனந்தரங்கம் பிள்ளை அவர்களின் நாள் குறிப்பில் இருக்கிறது என அண்ணாமலை சுகுமாரன் அவர்கள் தெரிவித்தார்.



# கண் சுமந்த கடவுளுக்கே
# கண் தந்த கண்ணப்ப நாயனார்



சிவத்திரு. ச.நித்தன்

கடந்த நூற்றாண்டில் தான் உடல் உறுப்புக்களைத் தானமாக வழங்க முடியும் என்ற விஞ்ஞான உண்மையை உலகம் அறிந்தது. ஆனால் விஞ்ஞானத்தையும் விஞ்சும் சக்தி மெஞ்ஞானத்துக்கு உண்டு என்பதை உணர்த்துவது கண்ணப்ப நாயனாரின் சரிதம்.

பொத்தப்பி எனும் மலைநாட்டில் உடுப்பூர் எனும் ஊரில் வேட்டுவ குலத்தில் அவதரித்த நாயகனே திண்ணனார். ஒரு நாள், தன் நண்பர்களான காடன், நாணனுடன் வேட்டைக்குச் சென்று பன்றி ஒன்றை வேட்டையாடினார். அவர்கள் நடந்து



பொன்முகலி ஆற்றங்கரையை அடைந்ததும் பன்றியைத் தீயில் வாட்டும் படி காடனிடம் கூறினார்.

அப்போது அருகிலிருந்த மலை திண்ணனாரைக் கவர்ந்தது. மலை மீது ஏறினார். அங்கே மரங்களின் நடுவே சிவ லிங்கம் ஒன்றைக் கண்டார். அச் சிவலிங்கத்தின் மீது சில பூக்களும் இலை தழைகளும் இருந்தன. காளத்தியப்பரின் மேல் பேரன்பு பெருகியது. “இந்தக் கொடிய காட்டில் யார் இந்தப் பணியைச் செய்கிறார்கள்?” என்று கேட்க, நாணனும், ஒரு வேதியர் தினமும் வந்து அன்னம் படைப்பதாகக் கூறினான்.

“இக்காட்டில் தனித்திருக்கும் இவருக்குப் பசிக்காதோ!? உணவு படைக்க வேணுமே!” என்று கூறி மலையை விட்டு குடு குடுவென இறங்கினார். காடன் சுட்டு வைத்திருந்த பன்றி இறைச்சியை சுவைத்துப் பார்த்தார். அதில் நல்ல தசைகளை மட்டும் எடுத்து வைத்தார். பின் ஆற்றிற்குச் சென்று நீரை வாயில் அடக்கிக் கொண்டார். நேராக மலைக்கு ஓடினார்.

சிவலிங்கத்தின் மீது நீரை உமிழ்ந்தார். தான் கொண்டு வந்த பன்றிக் கறியைப் படைத்தார். நெடுநேரம் சிவலிங்கத்தையே பார்த்தபடி நின்றார். திண்ணனாரின் வினோத செயல்களைப் பார்த்த நாணனும் காடனும் தங்கள் தலைவருக்கு ஏதோ தீவினை தொற்றிவிட்டது என்று நினைத்து அவரின் தந்தையிடம் கூற ஓடினார்கள்.

திண்ணனாரோ அவ்விடத்தைவிட்டு அசையவில்லை. இரவில் தனித்திருக்கும் சிவலிங்கத்திற்கு கொடிய விலங்குகளால் தீங்கு நேர்ந்து விடுமோ என்று அஞ்சி இரவு முழுவதும் காவல் காத்தார். மறுநாள் காலையிலேயே மலையை விட்டு இறங்கினார்.

காலையில் வழக்கம் போல பூசை செய்ய வந்த வேதியர் சிவலிங்கத்தின் முன்னிருந்த மாமிசத்தைப் பார்த்துப் பதறினார். “ஐயகோ! யார் இந்தப் பாதகத்தைச் செய்தது!?” என்று துடித்தார். மாமிசத்தை அப்புறப்படுத்தி சிவலிங்கத்தை நீராட்டி, பூக்கள் சூடி, அன்னம் படைத்தார். எம்பெருமானை வணங்கி அவ்விடம் விட்டகன்றார். அன்றிரவு வந்த திண்ணனார் மறுபடியும் பன்றி இறைச்சியைப் படைத்தார், இரவில் காவல் காத்தார். இவ்வாறு பல நாட்கள் நடந்தது.

இறைவன் முன் தினமும் மாமிசம் இருப்பதைக் கண்டு மனம் பொறுக்க முடியாத வேதியர் ஒரு நாள் “எம்பெருமானே! உனக்கு மாமிசம் படைக்கும் தூய்மையற்ற செயலைச் செய்பவர் யாரோ? இதை நீரே பார்த்துக் கொள்ளும்” என்று வேண்டினார்.

திண்ணனாரின் அகத்தூய்மையை அகிலத்திற்கு உணர்த்தும் திருவிளையாடலை அரங்கேற்ற எம்பெருமான் திருவுளம் கொண்டார். சிவபெருமான் வேதியரின் கனவில் தோன்றி, “வேதியரே! எனக்குத் தினமும் ஒருவன் மாமிசம் படைப்பது என் மேல் உள்ள அன்பினாலேயே! அவனது அன்பை நீர் காண வேண்டும் என்றால் இன்றிரவு வந்து அவன் அறியாதபடி ஒளிந்திருந்து கவனிக்க வேண்டும்!” என்று அருளினார். வேதியரும் இரவில் மலைக்குச் சென்று ஒரு மரத்தின் பின்னால் ஒளிந்திருந்தார்.

வழக்கம் போல இரவில் மலையை நோக்கி வந்த திண்ணனாருக்கு வரும் வழியில் சில கெட்ட சகுனங்கள் தோன்றின. அவர் மனதில் பதட்டம் பற்றிக் கொண்டது. சிவலிங்கத்தை நோக்கி ஓடினார் அப்போது சிவலிங்கத்தின் வலது கண்ணிலிருந்து இரத்தம் வடிந்து கொண்டிருந்தது.

அதைக் கண்ட திண்ணனார் பதறினார் மனம் பதைபதைத்தார். “ஐயனே! இந்த அடாத காரியத்தைச் செய்தவர் யார்?” என்று கூறிய படி அங்கும் இங்கும் ஓடினார். தனது கையை வைத்துக் கண்ணை அடைத்தார். பயனில்லை மலையில் இருந்த பச்சிலை மூலிகைகளைக் கண்ணில் ஒற்றினார். ஆனாலும் உதிரம் நிற்கவில்லை.

“ஊனுக்கு ஊன் ஊற்ற நோய் தீர்க்கும்” என்பதை அறிந்திருந்த திண்ணனார் அம்பால் தமது வலது கண்ணைத் தோண்டி எடுத்தார். சிவபெருமானின் பழுது பட்ட கண்ணை அகற்றி, தனது கண்ணைப் பொருத்தினார். இரத்தம் வடிவது நின்றது. திண்ணனாரின் மனம் கொஞ்சம் ஆறுதல் அடைத்தது.

ஆனால் சிறிது நேரத்திலேயே சிவலிங்கத்தின் மறு கண்ணில் இருந்தும் இரத்தம் வழிந்தது. அதைக் கண்ட திண்ணனார் கணமும் யோசிக்காமல் தன் மறுகண்ணையும் தோண்டி எடுக்க முன்வந்தார். மறுகண்ணையும் எடுத்துவிட்டால் பார்வை போய் விடும், கண்ணைச் சரியாக ஒற்ற முடியாது என்பதால், தமது வலது காலை எடுத்து இறைவனின் இடது கண்ணில் அடையாளத்திற்காகப் பதித்தார்.




அம்பை எடுத்துக் கண்ணைத் தோண்ட முயல்கையில், “நில்லு கண்ணப்ப! நில்லு கண்ணப்ப! என் அன்புடைத் தோன்றல் நில்லு கண்ணப்ப!” என்று அசரீரி கேட்டது. திண்ணனார் திகைத்து நின்றார். இறைவன் திண்ணனாருக்கு அருகாட்சியளித்தார்.

அத்திருக்காட்சியை மரத்தின் பின்னால் மறைந்திருந்த வேதியர் கண்டு, திண்ணனார் எம்பெருமான் மீது கொண்டிருந்த பேரன்பை உணர்ந்தார் பெருமகிழ்ச்சி கொண்டார்.

சிவபெருமான் திண்ணனாரிடம், “என் மீது பேரன்பு கொண்ட நீ எப்போதும் என் நிழலில் வீற்றிருப்பாயாக!” என்று பேரருள் புரிந்தார். இறைவனுக்குக் கண் தந்த திண்ணனார் இறைவனாலேயே “கண்ணப்பர்” என்று அழைக்கப்பட்டு அழியாப் பேறு பெற்றார்.தை மாதத்தில் மான்றலை நாண்மீன் (மிருகசீரிட நட்சத்திர) தினத்தன்று கண்ணப்பருக்கு குருபூசை நடக்கிறது.

**காவியக் கண்ணப்பர் -**
**உலகத்தின் முதல் கண்தானம்!!!**

# தாயிற் சிறந்த
# தயாவான தத்துவனே



சிவத்திரு
யாழவன்
சிவவேதன்

‘மாதா, பிதா, குரு, தெய்வம்’ என்பது முதுவாக்கு. இதனை தாய்க்கு பின் தந்தை, தந்தைக்கு பின் குரு, குருவிற்கு பின் தெய்வம் என்று விளக்குகின்றார்கள் தமிழ் மூத்தோர்கள். ஒரு குழந்தை பிறக்கின்றது. அந்தக் குழந்தை தாயை முதலில் அடையாளம் கண்டு கொள்கின்றது. ஆகவே அந்தக் குழந்தையின் வாழ்வில் தாய் முதலாம் படியை பிடித்துக் கொள்கின்றாள். அந்தத் தாய் தன் குழந்தைக்கு தந்தையை அறிமுகம் செய்து வைக்கிறாள். தாயின் வழியே தந்தை இரண்டாம் படியை பிடித்துக் கொள்கின்றார். அந்த மழலை வளர்கின்றது. வளர்ந்து ஒரு பருவத்தை அடைந்ததும் குருவை அறிமுகம் செய்து வைக்கிறார் தந்தை. இங்கு குழந்தையின் மூன்றாவது இடத்தை குரு நிரப்பிக் கொள்கின்றார். இவ்வாறு வந்த குழந்தையை கல்வி மூலம் பக்குவப்படுத்தி மெய்ப்பொருளான இறைவனை அறிமுகப் படுத்தி வைக்கின்றார் குரு. இதனை அழகுற எடுத்து இயம்புகின்றான் தழிழுக்கு அறம் வகுத்த பெரியோன் வள்ளுவன்.

“கற்றதனா லாய பயனேன்கொல் வாலறிவன்
நற்றாள் தொழாஅர் எனின்”

அறிவே வடிவான இறைவனின் பாதங்ளை தொழவில்லை எனின் ஒருவன் எவ்வளவு கற்றும் ஒரு பயனும் இல்லை என்று பொய்யா மொழிப் புலவன் கல்வியின் பயனை கடவுளின் காலில் வைத்துத் தொழுகின்றான். ஆக குருவின் கல்வி மூலம் அந்தக் குழந்தை இறைவனின் பாதத்தைப் பற்றுகின்றது. இத்தகு பெரும் பொருளை அறிமுகம் செய்யும் படிநிலை உறவுகளே தாய், தந்தை, ஆசான், இவற்றுள் மறக்கவும் தவிர்க்கவும் முடியாத உறவு எனில் அது தாய் உறவேயாகும். தாய் என்பது அனைத்து உயிர்களுக்கும் பொதுவானது. இவ்வாறு பொதுவான உணர்ச்சி மிக்க அந்த தாயினை விஞ்சியவனாக தென்னாட்டு ஈசனை வர்ணிக்கின்றார் மாணிக்கத்தின் வாசகன்.

பால் நினைந்து ஊட்டும் தாயினும் சாலப் பரிந்து, நீ, பாவியேனுடைய
ஊனினை உருக்கி, உள் ஒளி பெருக்கி, உலப்பு இலா ஆனந்தம் ஆய
தேனினைச் சொரிந்து, புறம் புறம் திரிந்த செல்வமே! சிவபெருமானே!
யான் உனைத் தொடர்ந்து, சிக்கெனப் பிடித்தேன் எங்கு எழுந்தருளுவது, இனியே?

அன்பின் உச்சக் கட்டத்தில் மாணிக்கவாசகர் பாடுகின்றார். தன் பிள்ளைக்கு பசியெடுக்க அந்தக் குழுந்தை அழ ஆரம்பித்ததும் தாயானவள் பாலூட்டுவாளாம். ஆனால் ஈசன் தாயினை விட ஒரு படி மேலே சென்று நாம் கேட்க முதலே எம்மை ஆட்கொண்டு, எம் உடம்பினை உருக்கி, அதன் உள்ளே இருக்கின்ற ஞானமாகிய ஒளியை பெருகச் செய்து அழிவற்ற பேரின்பமாகிய தேனை சொரிவானாம். தாயானவள் பாலூரட்ட தாய்க்கு மேலே சென்று தேனினை சொரிகின்றான் தென்புலத்து இறையோன் என்று பக்தியை தாண்டி தாயிற் சிறந்த தத்துவனாக ஈசனை நிறுத்துகின்றார் மாணிக்கவாசகர்.

சாதாரணமாக யாராலும் தாயை விட்டுக் கொடுக்க முடியாது. ஆனால் மாணிக்கவாசகர் தாயை விட ஈசனை உயர்த்தி போற்றுகின்றார் எனில் அது பக்தியின் எல்லையை தாண்டிய உச்சக் கட்டம் என்றே கருதலாம். இந்தப் பாடலில் மாணிக்கவாசகர் ஒரு விடயத்தை சொல்லிச் செல்கிறார். அந்த விடயம் யாதெனில் “ஊனினை உருக்கி உள்ளொளி பெருக்கி உலப்பிலா ஆனந்தமாய” இந்த வாசகம் அனுபவ முதிர்ச்சியின் வெளிப்பாடே எனலாம். “உடம்பினை உருக்கி தென்புலத்து இறைவன் உள்ளே இருக்கும் ஒளியை பெருக செய்து ஆனந்தத்தை தருகின்றான்” என்று மாணிக்கவாசகர் நயம்பட உரைக்கின்றார். எளிதாக சொல்ல வேண்டும் என்றால் ஒரு அழகான வர்ணத்தாளினால் சுற்றப்பட்ட ஒரு பரிசுப் பொதியை ஒருவர் உம்மிடம் தருகின்றார். பரிசுப் பொதி எவ்வளவு அழகானதாகவும் இருக்கலாம் ஆனால் அந்தப் பரிசுப் பொதியின் நோக்கம் வர்ணமயமான தாளில் இல்லை உள்ளே உள்ள பொருளில் தான் அடங்கியுள்ளது. பிரிக்காமல் விட்டால் உள்ளே உள்ள பொருள் பயன்படாமல் வீணாகிவிடும். அதுபோல தான் இந்த வாழ்க்கை உடல், குடும்பம், பணம் போன்ற வர்ணதாள்களால் சுற்றப்பட்டு இறைவன் எமக்கு தந்த பரிசே இந்த வாழ்வு. வெளியே இருக்கின்ற வாழ்வு தான் உண்மை என்று உள்ளே இருக்கும் ஞானத்தை பிரித்து பார்க்காமல் விட்டால் இந்த வாழ்வின் நோக்கமே வீணாகிவிடும். எனவே இப்படிப்பட்ட வாழ்வின் பரிசுப் பொதியுறையாகிய உடலினை உருக்கி உள்ளே இருக்கின்ற ஞானத்தை தென்புலத்து ஈசன் வெளியே கொண்டு வருகின்றான் என்று தாய்க்கு மேலாக தலைவனை உயர்த்திப் பாடுகின்றார் மாணிக்கவாசகர்.


இதனைத் தொடர்ந்து மாணிக்கவாசகர் தேனைச் சொரிந்து ஈசனானவன் என் பின்னே என்னைத் தொடர்ந்து வந்தானாம் என்று பாடுகின்றார். அத்தகு மறையாப் பொருளை செல்வமே என்று அன்பின் அடுத்த கட்டத்திற்கு எடுத்துச் செல்கின்ற மாணிக்கவாசகர் தொடர்ந்து செல்கின்றார் “நான் உனக்கே தெரியாமல் உன்பின்னே வந்து உன்னைப் பிடித்துக் கொண்டேன், ஈசனே இனி எங்கு சென்று ஒழிந்து கொள்வாய்” என்று தாய்மையின் சிறப்பினை அடுத்த பரிமாணத்திற்கு எடுத்துச் சென்று தாயுமான ஈசனுக்கு வழங்குகின்றார்.

ஒரு குழந்தை தன் தாயுடன் விளையாடிக் கொண்டிருக்கின்றது. திடீரென்று தாய் எழுந்து செல்கின்றாள். உடனே குழந்தை தாயினை இறுகப் பற்றிப் பிடித்து “நான் உன்னை பிடித்து விட்டேன் நீ ஓடமுடியாது” என்று சொன்னதாம். அதுபோல இறைவனைத் தாயாகக் கருதி தன் உள்ளத்து உணர்ச்சிகளை கொட்டித்தீர்க்கின்றார் மாணிக்கவாசகர். திருக்குறள் என்றால் அதன் சிறப்பு ஈரடிக் குறளிலே தங்கியுள்ளது. திருப்புகழ் என்றால் அதன் சிறப்பு முருகனைப் பாடி முருகனின் புகழை பறைசாற்றுவதிலேயே உள்ளது. அதே வகையில் திருவாசகத்தை எடுத்தால் அதன் சிறப்பு வாசகங்களிலேயே உள்ளது. வாசகத்திற்கு வாசகம் உணர்ச்சியாழும் தாய்மை கடந்த பக்தியாலும் நிரம்பி வழிகின்றது. “திருப்புகழில் கரையாதோர் வேறு புகழில் கரையார், திருவாசகத்திற்கு உருகாதோர் ஒரு வாசகத்திற்கும் உருகார்” என்பது முதுமக்கள் மொழிக் கூற்று. இத்தகு திருவாசக நாயகன் சிற்றம்பலநாதனை தாய்மைக்கும் மேலான படியில் வைத்து அனைத்து இலக்கியங்களும் தென்னாட்டு இறைவனின் சிறப்பைப் பாடுகின்றன.

“நாயில் கடையாய்க் கிடந்த அடியேற்குத்
தாயில் சிறந்த தயாவான தத்துவனே
மாசற்ற சோதி, மலர்ந்த மலர்ச்சுடரே
தேசனே, தேனார் அமுதே, சிவபுரனே”

திருச்சிற்றம்பலம்

# சிவத்தமிழ் வித்தகம் சிவ.மகாலிங்கம்



சிவபூமியின் சைவ வளர்ச்சிக்கு உறுதுணையாக நின்ற தூண்களில் முக்கியமானவர் சிவத்தமிழ் வித்தகர் சிவ.மகாலிங்கம் அவர்கள். இவர் யாழ்ப்பாண நகரில் இருந்து வடக்கே 10 கி.மீ தூரத்தில் சைவமும் தமிழும் தழைத்த குப்பிழான் கிராமத்தில் ‘கிளாக்கர்’ சிவ. சுப்பிரமணியம், அன்னபூரணம் தம்பதிகளின் இரண்டாவது மகனாக 1949 ஆம் ஆண்டு மாசித் திங்கள் 18ம் நாள் (1/3/1949) பிறந்தார்.

குப்பிழான் கற்கரைக் கற்பக விநாயகர் கோயிலே இவரது குலதெய்வக் கோயிலாகும். இவரது சைவநெறிச் செயற்பாடுகள் அங்குதான் அடியெடுத்து வைத்தன.. இங்கு கோயில் அறங்காவலர் சபையின் கீழ், மாணவர்களைக் கொண்ட “பிரார்த்தனை சபை” என்ற அமைப்பை உருவாக்கி, அதன் தலைவர், செயலாளர் பதவிகளை வகித்தார். இச்சபை மூலம் பல்வேறு நிகழ்வுகளை தலைமையேற்று நடத்தி, ஊறறிந்த இளம் தலைவராக விளங்கினார். இவரின் இந்த இளமைச் செயற்பாடுகளே பின்னர் சிறந்த பேச்சாளராக மிளிர அடிக்கல் நாட்டியது.

இவர் தனது ஆரம்பக் கல்வியை குப்பிழான் விக்னேஸ்வரா வித்தியசாலையில் தொடங்கி தரம் ஐந்து பரீட்சையில் சிறந்த பெறுபேறுகளைப் பெற்று, உயர்கல்விக்காக யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரிக்கு சென்றார். அங்கு விடுதி மாணவனாக இருந்து கல்வியைத் தொடர்ந்தார். இவரது சைவத் தமிழ் உணர்வை வலுவூட்டியதில் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரிக்கு நிறையப் பங்கு உண்டு.

தனது மாணவப் பருவத்திலே குப்பிழானில் இலவச வகுப்புகளை நடத்தினார். இது பின்னர் இவரைப் புனித இலட்சியப் பாதையான ஆசிரியப் பணிக்கு அனுப்பிவைத்தது. பின்னர் நில அளவையாளர் துறையில் கல்வி கற்று, பயிற்சியும் பெற்றார். ஆனால் தனது ஆழ் மனதின் ஆசைகளுக்கு மதிப்பளித்து, அவர் பெரிதும் மதிக்கும் ஆசிரியப் பணியை நாடி கொழும்புத்துறை ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையில் 1972ம் ஆண்டு சேர்ந்தார்.

உரும்பிராய் இந்துக் கல்லூரி, யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியில் ஆசிரியராக கடமையாற்றி பின்னர் பலாலி ஆசிரியர் கலாசாலையில் விரிவுரையாளர் ஆனார். அங்கே உப அதிபராகி பின்னர் அதிபரானார். பின்னர் 2003ம் ஆண்டு இலங்கை இந்து சமய கலாசார திணைக்களத்தின் வடமாகாண உதவிப்பணிப்பாளராக கடமையேற்றார்.

ஈழத்தமிழ் மண்ணில் சைவ சமயப் பேச்சாளர் வழியில் பல ஆண்டு காலமாக முதன்மையாளராக திகழ்ந்தார். கோயில்கள், விழாக்கள் மற்றும் பாடசாலைகள் என இவரின் சைவப் பேச்சுகள் எங்கும் முழங்கின. அந்த அறிவியல் ஊடுக்கடத்தலில் பல மாணவர்கள் உருவாகியிருக்கிறார்கள். இலங்கையில் மட்டுமல்ல வெளிநாடுகளிலும் இவரது சமயப் பேச்சுக்கள் வானலைகளில் கலந்தன.

திருமுறைகளை நன்கு கற்றுணர்ந்திருந்தாலும் தமிழ் மந்திரமாகிய திருமந்திரத்தினையே இவர் விரும்பிப் படிப்பது, அதனைப் பற்றி பேசுவது மற்றும் அதன் வழி நிற்பது என, இலங்கையைச் சிவபூமியென சொன்ன திருமூலரின் வாக்கினை மேய்ப்படுத்தியும் வந்தார்.

பேச்சுடன் மட்டும் நில்லாது, தனது சமய அறிவையும் அனுபவத்தினையும் சேர்த்து, திருமுறைச்செல்வம் (1999), சிவஜோதி (2001), முருகமந்திரம் (2007), ஞானதீபம் (2009), இந்து நாகரீகம் - தரிசனங்களும் வாழ்வியலும் (2011), தவமுனிவரின் தமிழ் மந்திரம் (2013), சமய வாழ்வியல் (2016), நற்சிந்தனை மலர் (2017) ஆகிய நூல்களையும் வெளியிட்டார்.

அத்துடன் ஞானச்சுடர், சிவபூமி, நல்லைக்குமரன் போன்ற மலர்களிலும் தொடர் ஆக்கங்களை எழுதி வந்தார். கற்பித்தல், சமயப் பேச்சுகள் மட்டுமல்லாது பல வழிகளிலும் இறைவனைத் தேடித் தேடித் தொழுதார். சந்நிதி முருகன் என்றால் இவருக்கு அளவுகடந்த காதல். அடிக்கடி அங்கு சென்று மெய்யுருகிப் பாடிபணிவார். இவரது கடைசிப் பேச்சு இவரது பாடசாலையான யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியில் உள்ள ஞானலிங்கேச்சரர் பீடத்தில் 2018 மார்கழித் திருவாதிரையன்று இடம் பெற்றது. பின்னர் ஒருமாத காலத்துள் நோய் வாய்ப்பட்டு 2019ம் ஆண்டு மாசி 1ம் நாள், வளர்பிறை எண்மைப் பிறைநாள் அன்று பரம்பொருளின் கழல்களைச் சென்றடைந்தார்.

**இவர் அடிக்கடி சொல்லும் திருமந்திரப் பாடல்கள்**

சிவ சிவ என்கிலர் தீவினை யாளர்
சிவ சிவ என்றிடத் தீவினை மாளும்
சிவ சிவ என்றிடத் தேவரும் ஆவர்
சிவ சிவ என்னச் சிவகதி தானே - திருமந்திரம்

குருட்டினை நீக்கும் குருவினைக் கொள்ளார்
குருட்டினை நீக்காக் குருவினைக் கொள்வார்
குருடும் குருடும் குருட்டு ஆட்டம் ஆடிக்
குருடும் குருடும் குழிவிழும் ஆறே - திருமந்திரம்

**சிவத்தமிழ் வித்தகரின் அமுத மொழிகள் சில**

1. உலகப்பெருஞ் சமயங்களில் ஒன்றாகவும், உலகில் தோன்றிய முதற் சமயமாகவும் காணப்படுகின்ற சைவ சமயத்தில், காலத்திற்கு காலம் பக்தர்கள், ஞானிகள், சித்தர்கள் எனப் பலர் தோன்றி எமது சமயத்தின் பெருமைகளை உலகறியச் செய்துள்ளார்கள்
2. பத்தர்கள், சித்தர்கள் ஆகிய இருவரும் இறையுணர்வோடு வாழ்பவர்கள் என்றாலும், இருவருக்கும் இடையே நுண்ணிய வேறுபாடு உண்டு. கடவுளை காண முயல்பவர்கள் பத்தர்கள் என்றும் கடவுளைக் கண்டு தெளிந்தவர்கள் சித்தர்கள் என்றும் கூறுவர்.
3. பத்தியே உண்மைச் சமயத்தின் உயிர்நாடியாக உள்ளது.
4. இறைவனைப் பற்றிக்கொள்ள வேண்டுமென்ற மனித மனம் முயல்கின்ற முயற்சியே பத்தி ஆகும்.
5. ஆன்மாவுக்கும் இறைவனுக்கும் உள்ள உறவு ஒன்றை மட்டும் ஆன்மா விரும்பி நிற்பதே பத்தி எனப்படும்.
6. பத்தர் என்பவர் சமய உணர்வோடு வாழ்பவர் ஆவர்.
7. பத்தி செய்வதென்பது மனித நேயத்துடன் உடலாலும், வாக்காலும், மனத்தாலும் இறைத்தொண்டு செய்தலும் இறைவனைப் பாடிப் பரவுதலும் ஆகும்.
8. இறைவனை சென்று அடைவது தான் உயிர்களின் குறிக்கோள் ஆகும்.
9. பற்றுக்களில் இருந்து விடுபட்டவன் பந்த பாசங்களை துறந்து, பொய்த்தோற்றங்களைத் புறக்கணித்து மெய்ஞானம் பெற்று இறைவன் திருவடியை சென்று அடைகின்றான்.

**திருவம்பலம் தென்னவன், தென்னாடு.**

# மக்கட் செல்வம் வாய்க்கப் பெறுவதற்குப் பாடவேண்டிய திருவெண்காட்டுத் திருப்பதிகம் - “கண் காட்டும் நுதலானும்”

**வெண்காட்டுநாதர் திருக்கோயில்**

**இறைவன் :** வெண்காட்டுநாதர்
**இறைவி :** பண்மொய்த்த இன்மொழியாள்
**பண் :** சீகாமரம் (2-48)
**இராகம் :** நாதநாமக்கிரியை

**திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார் அருளிய திருவெண்காட்டுத் திருப்பதிகம்**

1. கண் காட்டும் நுதலானும், கனல் காட்டும் கையானும்,
பெண் காட்டும் உருவானும், பிறை காட்டும் சடையானும்
பண் காட்டும் இசையானும் பயிர் காட்டும் புயலானும்
வெண் காட்டில் உறைவானும், விடை காட்டும் கொடியானே.

2. பேய் அடையா, பிரிவு எய்தும் பிள்ளையினோடு உள்ளம் நினைவு
ஆயினவே வரம் பெறுவர் ஐயுற வேண்டா ஒன்றும்
வேயனதோள் உமை பங்கன் வெண்காட்டு முக்குள நீர்,
தோய்வினையார் அவர் தம்மைத் தோயாவாம், தீவினையே.

3. மண்ணொடு நீர், அனல், காலோடு ஆகாயம், மதி, இரவி,
எண்ணில் வரும் இயமானன், இகபரமும், எண்திசையும்
பெண்ணினொடு ஆண் பெருமையொடு சிறுமையும், ஆம் பேராளன்
விண்ணவாகோன் வழிபட, வெண்காடு இடமா விரும்பினனே.

4. விடம் உண்ட மிடற்று அண்ணல் வெண்காட்டின் தண்புறவின்
மடல் விண்ட முடத்தாழை மலா நிழலைக் குருகு என்று
தடம் மண்டு துறைக்கொண்டை, தாமரையின் பூமறையக்
கடல் விண்ட கதா முத்தம் நகை காட்டும் காட்சியதே.

5. வேலை மலி தண்கானல் வெண்காட்டான் திருவடிக்கீழ்
மாலை மலி வண்சாந்தால் வழிபடு நல் மறையவன்தன்
மேல் அடாவெங்காலன் உயிர் விண்டபினை, நமன் தூதா,
ஆலமிடற்றான் அடியார் என்று, அடர அஞ்சுவரே.

6. தண்மதியும் வெய்யரவும் தாங்கினான், சடையின் உடன்
ஒண்மதிய நுதல் உமை ஓர் கூறுஉகந்தான் உறைகோயில்
பண்மொழியால் அவன் நாமம் பல ஓதப், பசுங்கிள்ளை
வெண்முகில் சேர கரும்பெணை மேல் வீற்றிருக்கும் வெண்காடே.

7. சக்கரம் மாற்கு ஈந்தானும், சலந்தரனைப் பிளந்தானும்,
அக்கு அரைமேல் அசைத்தானும் அடைந்து அயிராவதம்பணிய
மிக்க அதனுக்கு அருள் சுரக்கும் வெண்காடும் வினைதுரக்கும்
முக்குளம் நன்கு உடையானும், முக்கண்உடை இறையவனே.

8. பண்மொய்த்த இன்மொழியாள், பயம்எய்த மலைஎடுத்த
உன்மத்தன் உரம் நெரித்து, அன்று அருள்செய்தான் உறைகோயில்,
கண்மொய்த்த கரு மஞ்ஞை நடம்ஆடக், கடல் முழங்க
விண்மொய்த்த பொழில் வரிவண்டு இசைமுரலும் வெண்காடே.

9. கள்ஆர்செங் கமலத்தான் கடல்கிடந்தான், என இவர்கள்
ஒள் ஆண்மை கொளற்று ஓடி, உயர்ந்து ஆழ்ந்தும், உணர்வு அரியான்
வெள் ஆனை தவம் செய்யும் மேதகு வெண்காட்டான் என்று
உள்ஆடி உருகாதார் உணர்வு உடைமை, உணரோமே.

10. போதியாகள் பிண்டியாகள் மிண்டு மொழிபொருள் என்னும்
பேதையர்கள் அவர் பிறமின் அறிவுடையீர், இதுகேள்மின்
“வேதியாகள் விரும்பியசீர் வியன் திருவெண்காட்டான்” என்று
ஓதியவா யாதும் ஒரு தீது இலா என்று உணருமினே.

11. தண் பொழில் சூழ் சண்பையர் கோன், தமிழ்ஞான சம்பந்தன்,
விண்பொலி வெண் பிறைச் சென்னி விகார்தன் உறை வெண்காட்டைப்,
பண்பொலி செந் தமிழ் மாலை பாடியபத்து இவை வல்லார்,
மண்பொலிய வாழ்ந்தவர், போய் வான்பொலியப் புகுவாரே.

**திருச்சிற்றம்பலம்**

**திருவெண்காடு செல்லுங்கள்:**

பிள்ளைச் செல்வம் வேண்டிநிற்பவர்கள், திருவெண்காட்டு நாதரையும், பண்மொய்த்த இன்மொழியாள் அம்மையையும் சென்று வழிபட்டு திருஞானசம்பந்தப் பெருமான் பாடிய மேலுள்ள பதிகத்தினைப் பாடி மக்கட் செல்வத்தினை பெறவேண்டி விண்ணப்பம் வையுங்கள். திருவருள் நிச்சயம் கிடைக்கும். சீர்காழியில் இருந்து பூம்புகார் செல்லும் வழித்தடத்தில், சீர்காழியில் இருந்து சுமார் 13 கி.மீ. தொலைவில் திருவெண்காடுத் தலம் இருக்கிறது.

(மேலதிக விபரம் பக்கம் 09)

தென்னாடு
www.thennadu.org

சிவத்திரு. சிவ செந்தமிழாதன்,
தலைவர் – சைவ மாணவர் சபை,
(பதிவு–HA/4/JA/343)
0715588737, aathan@thennadu.org



# தாய்மொழித் தினத்தில் உறுதிகொள்வோம்!

1952 ஆம் வருடம் மாசி மாதம் 21 ஆம் நாள் அன்றைய கிழக்குப் பாகித்தான் (இன்றைய வங்காள தேசம்) தலைநகர் தாக்காவில், வங்காள மொழியை அரச மொழியாக்க கோரி நடாத்தப்பட்ட போராட்டத்தில் நான்கு மாணவர்கள் தமது உயிரைத் தியாகம் செய்கின்றனர். அந்த நாளை, 1999 ஆம் வருடம் மாசி மாதம் 21 ஆம் திகதி பன்னாட்டு தாய்மொழி தினமாக யுனெஸ்கோ அமைப்பு அறிவிக்கின்றது. இந்த நாளை கடந்த வாரம் உலகத்தமிழர்களும், ஏனைய மொழிவழித் தேசிய இனங்களும் தம் தம் தாய்மொழியை ஏற்றி போற்றி கொண்டாடி மகிழ்ந்தனர். வங்காளதேசத்தின் தனிநாட்டுக் கோரிக்கைக்கு வித்திட்ட, அந்த நாளை பன்னாட்டு தாய்மொழித்தினமாக நாமெல்லாம் கொண்டாடினாலும், தமிழகத்தில் இந்தி திணிப்புக்கு எதிராக போராடி தம் இன்னுயிரை ஈகம்செய்த தியாகிகளும் தமிழர்களால் நீள நினைந்து போற்றுதற்குரியவர்களே! ஆனால் அந்தப் போராட்டத்தில், எம் தாய் மொழியை ஆட்சி மொழியாக்க கோரி உயிர்நீத்த தியாகி அரங்கநாதன் நினைவாக அமைக்கப்பட்ட சுரங்க வழியை இன்று "அரங்கநாதன் சப் வேய்" என்று ஆங்கிலத்திலேயே அடையாளப்படுத்துகின்றோம்!

எந்த இலட்ச்சியத்துக்காக எம் முன்னவர்கள் போராடி வணங்குதற்குரியவர்கள் ஆனார்களோ, அந்த இலட்சியத்தையும் நோக்கத்தையும் அடுத்த தலைமுறைக்கு கடத்தாமையே இந்தத் துயரத்துக்கு காரணமாகும்! நிற்க. பிறந்த போதே உயிருடனும் உணர்வுடனும் பிணைக்கப்பட்ட தாய் மொழி யாவர்க்கும் உன்னதமானதும், உயர்வானதுமே! எந்த மொழியைத் தாய்மொழியாகக் கொண்டவரும் அம்மொழியிலேயே உரையாடவும், வழிபடவும், உத்தியோகபூர்வ நடவடிக்கைகளை மேற்கொள்ளவும் இருக்கின்ற உரிமையை தவிர்ப்பதை எம்மடத்தனமாகவே கொள்ளவேண்டும்! அதிலும் குறிப்பாகத் தமிழர்களே இந்த மடத்தனத்தை தெரிந்தோ தெரியாமலோ அந்நிய ஆட்சியின் அடிமைத்தனத்தின் நீட்சியாகவோ கைக்கொண்டு வருகின்றனர்!

வழிபட ஒருமொழி , கையொப்பமிட ஒருமொழி , உரையாட ஒருமொழி என்று பட்டியல் நீளும்!

மொழிக்கடத்துகையை அடுத்த தலைமுறைக்குக் கையளிப்பதில் ஒரு கனதியான கருவியே வழிபாடாகும்!

இளவயதில் இருந்து இருகரம் குவித்து இறைவனைத் தம்மொழியால் வழிபடுவதே தாய்மொழியின் மீதான பற்றுதலை பக்தியோடு வளர்ப்பதற்கு உந்துதல் தரும்!

தென்னாடு முன்னெடுக்கும் தமிழ் வழிபாடும், தென்புல போற்றுதலும் இந்த தாய்மொழியின் உன்னத உயர்வுகளை அடுத்த தலைமுறைக்கு திரிபுகளோ, கொள்கைப் பிறழ்வுகளோ இன்றிக்கொடுப்பதற்கேயாகும். உலக தாய்மொழித்தினத்தில், உலக மொழிகளுக்கெல்லாம் தாயான மொழியை தாய்மொழியாக கொண்ட ஒவ்வொருதமிழனும் தெளிந்த பார்வையோடு தாய்மொழிச்செயற்பாடுகளை முன்னெடுக்க முயல வேண்டும்!

கருமுதல் கருவறை வரை தமிழ் ஒலித்தால், திருவும் சிறப்பும் பெருகும் என்பதை எங்கள் வீட்டுக் குழந்தைகளுக்குச் சொல்லிக்கொடுப்போம்! நாளை தமிழில் அவர்கள் இடப்போகும் கையெழுத்து எதிர்கால தமிழ் பிள்ளைகளின் தலையெழுத்தை மாற்றட்டும்!

## சைவ மாணவர் சபை - சிவத்தொண்டர்கள்



பிரதித் தலைவர்
சிவத்திரு.மு. ஒளியரசன்



பொதுச் செயலாளர்
சிவத்திரு.அ.இசையமுதன்



நிர்வாகச் செயலாளர்
சிவத்திரு.வ.தமிழரசன்



பொருளாளர்
சிவத்திரு.தி. கௌரீசன்

# சிவபுராணம்



சிவபுராணம்
சிவனது அனாதி முறைமையான பழமை
(திருப்பெருந்துறையில் அருளியது)
(கலிவெண்பா)

திருச்சிற்றம்பலம்

நமச்சிவாய வாஅழ்க நாதன் தாள் வாழ்க
இமைப்பொழுதும் என் நெஞ்சில் நீங்காதான் தாள் வாழ்க
கோகழி ஆண்ட குருமணிதன் தாள் வாழ்க
ஆகமம் ஆகிநின்று அண்ணிப்பான் தாள் வாழ்க
ஏகன், அநேகன், இறைவன் அடிவாழ்க

வேகம் கெடுத்தாண்ட வேந்தன் அடிவெல்க
பிறப்பறுக்கும் பிஞ்ஞகன்தன் பெய்கழல்கள் வெல்க
புறத்தார்க்குச் சேயோன்தன் பூங்கழல்கள் வெல்க
கரங்குவிவார் உள்மகிழும் கோன்கழல்கள் வெல்க
சிரங்குவிவார் ஓங்குவிக்கும் சீரோன் கழல்வெல்க

ஈசன் அடிபோற்றி எந்தைஅடி போற்றி
தேசன் அடிபோற்றி சிவன்சே வடிபோற்றி
நேயத்தே நின்ற நிமலன் அடிபோற்றி
மாயப் பிறப்பறுக்கும் மன்னன் அடிபோற்றி
சீரார் பெருந்துறைநம் தேவன் அடிபோற்றி

ஆராத இன்பம் அருளும்மலை போற்றி
சிவன் அவன்என் சிந்தையுள் நின்ற அதனால்
அவன் அருளாலே அவன்தாள் வணங்கிச்
சிந்தை மகிழச் சிவபுரா ணம்தன்னை
முந்தை வினைமுழுதும் ஓய உரைப்பன்யான்

கண்நுதலான் தன்கருணைக் கண்காட்ட வந்தெய்தி
எண்ணுதற்கு எட்டா எழிலார் கழல்இறைஞ்சி
விண்நிறைந்து மண்நிறைந்து மிக்காய் விளங்குஒளியாய்
எண்ணிறந்து எல்லை இலாதானே, நின்பெருஞ்சீர்
பொல்லா வினையேன், புகழும்ஆறு ஒன்று அறியேன்,
புல்லாகிப் பூடாய்ப் புழுவாய் மரமாகிப்
பல்விருக மாகிப் பறவையாய்ப் பாம்பாகிக்
கல்லாய் மனிதராய்ப் பேயாய்க் கணங்களாய்
வல்அசுர ராகி முனிவராய்த் தேவராய்ச்
செல்லாஅ நின்றஇத் தாவர, சங்கமத்துள்

எல்லாப் பிறப்பும் பிறந்து இளைத்தேன் எம்பெருமான்
மெய்யேஉன் பொன்னடிகள் கண்டுஇன்று வீடுற்றேன்
உய்யஎன் உள்ளத்துள் ஓங்கார மாய்நின்ற
மெய்யா, விமலா, விடைப்பாகா, வேதங்கள்
"ஐயா!" எனவோங்கி ஆழ்ந்து அகன்ற நுண்ணியனே,

வெய்யாய் தணியாய் இயமானன் ஆம்விமலா,
பொய்யா யினஎல்லாம் போயகல வந்தருளி
மெய்ஞ்ஞான மாகி மிளிர்கின்ற மெய்ச்சுடரே,
எஞ்ஞானம் இல்லாதேன் இன்பப் பெருமானே
அஞ்ஞானம் தன்னை அகல்விக்கும் நல்லறிவே

ஆக்கம் அளவு இறுதி இல்லாய், அனைத்துலகும்
ஆக்குவாய், காப்பாய், அழிப்பாய், அருள்தருவாய்,
போக்குவாய், என்னைப் புகுவிப்பாய் நின்தொழும்பில்
நாற்றத்தின் நேரியாய் சேயாய் நணியானே
மாற்றம் மனம்கழிய நின்ற மறையோனே

கறந்தபால் கன்னலொடு நெய்கலந்தாற் போலச்
சிறந்தடியார் சிந்தனையுள் தேனூறி நின்று
பிறந்த பிறப்பறுக்கும் எங்கள் பெருமான்
நிறங்கள்ஓர் ஐந்துடையாய், விண்ணோர்கள் ஏத்த
மறைந்திருந்தாய், எம்பெருமான், வல்வினையேன் தன்னை

மறைந்திட மூடிய மாய இருளை
அறம்பாவம் என்னும் அருங்கயிற்றால் கட்டிப்
புறந்தோல்போர்த்து எங்கும் புழுஅழுக்கு மூடி
மலஞ்சோரும் ஒன்பது வாயிற் குடிலை
மலங்கப் புலனைந்தும் வஞ்சனையைச் செய்ய,

விலங்கு மனத்தால், விமலா, உனக்கு
கலந்தஅன் பாகிக் கசிந்துஉள் உருகும்
நலன்தான் இலாத சிறியேற்கு நல்கி
நிலந்தன்மேல் வந்தருளி நீள்கழல்கள் காஅட்டி
நாயில் கடையாய்க் கிடந்த அடியேற்குத்

தாயில் சிறந்த தயாவான தத்துவனே
மாசற்ற சோதி, மலர்ந்த மலர்ச்சுடரே
தேசனே, தேனார் அமுதே, சிவபுரனே
பாசமாம் பற்றறுத்துப் பாரிக்கும் ஆரியனே,
நேச அருள்புரிந்து நெஞ்சில்வஞ் சங்கெடப்

பேராது நின்ற பெருங்கருணைப் பேராறே
ஆரா அமுதே, அளவிலாப் பெம்மானே
ஓராதார் உள்ளத்து ஒளிக்கும் ஒளியானே,
நீராய் உருக்கிஎன் ஆருயிராய் நின்றானே,
இன்பமும் துன்பமும் இல்லானே உள்ளானே

அன்பருக்கு அன்பனே, யாவையுமாய் அல்லையுமாம்
சோதியனே, துன்இருளே, தோன்றாப் பெருமையனே,
ஆதியனே, அந்தம் நடுவாகி அல்லானே,
ஈர்த்துஎன்னை ஆட்கொண்ட எந்தை பெருமானே,
கூர்த்தமெய்ஞ் ஞானத்தால் கொண்டுஉணர்வார்
தம்கருத்தின்

நோக்கரிய நோக்கே, நுணுக்கரிய நுண்ணுணர்வே,
போக்கும் வரவும் புணர்வும் இலாப் புண்ணியனே,
காக்கும்எம் காவலனே, காண்பரிய பேரொளியே,
ஆற்றின்ப வெள்ளமே, அத்தாமிக் காய்நின்ற
தோற்றச் சுடரொளியாய்ச் சொல்லாத நுண்ணுணர்வாய்

மாற்றமாம் வையகத்தின் வெவ்வேறே வந்தறிவாம்
தேற்றனே, தேற்றத் தெளிவே,என்சிந்தனையுள்
ஊற்றான உண்ணார் அமுதே, உடையானே,
வேற்று விகார விடக்குடம்பின் உட்கிடப்ப
ஆற்றேன்எம் ஐயா அரனே 'ஓ' என்றென்று

போற்றிப் புகழ்ந்திருந்து பொய்கெட்டு மெய்ஆனார்
மீட்டுஇங்கு வந்து, வினைப்பிறவி சாராமே
கள்ளப் புலக்குரம்பைக் கட்டு அழிக்க வல்லானே,
நள்ளிருளில் நட்டம் பயின்று ஆடும் நாதனே.
தில்லையுள் கூத்தனே, தென்பாண்டி நாட்டானே,

அல்லற் பிறவி அறுப்பானே 'ஓ'என்று
சொல்லற்கு அரியானைச் சொல்லித் திருவடிக்கீழ்ச்
சொல்லிய பாட்டின் பொருளுணர்ந்து சொல்லுவார்
செல்வர், சிவபுரத்தின் உள்ளார், சிவனடிக்கீழ்ப்
பல்லோரும் ஏத்தப் பணிந்து

திருச்சிற்றம்பலம்

# ஆகமம் ஆகி நின்று அண்ணிப்பான் தாள் வாழ்க

ஆகமம் ஆகி நின்று அண்ணிப்பான் தாள் வாழ்க என்ற தலைப்பில் ஆகமம் பற்றிய சில செய்திகளை இங்கே பார்க்கவிருக்கிறோம். தற்போதைய சூழலில் ஆகமம் எனும் சொல்லைப் பற்றிக்கொண்டு பல்வேறு கருத்துக்கள் கூறப்படுகின்றன. ஆனால் ஆகமம் என்பது தென்னகத்திற்கே உரிய நூல் தொகுப்பு ஆகும் .இதை அருளியவர் தென்னாடுடைய சிவனே.

### திருமூலரின் திருமந்திரத்தில்

திருமூலரின் காலம் சுமார் 4 - 5ம் நூற்றாண்டு என வரலாற்றாளர்களால் கூறப்படுகிறது. வேதங்களும் ஆகமங்களும் தோன்றியதால் தென்திசை புனிதமான திசை என திருமூலர் போற்றுகிறார். தென்னாட்டிலே தான் ஆகமம் பிறந்தது மட்டுமல்ல வளர்ந்தது மற்றும் வளர்ந்துகொண்டிருக்கிறது என்பதை பின்வரும் பாடலில் இருந்து அறியலாம்.

**ஈறான கன்னி குமரியே காவிரி**
**வேறா நவதீர்த்த மிக்குள்ள வெற்பேழுள்**
**பேறான வேதா கமமே பிறத்தலான்**
**மாறாத தென்திசை வையகஞ் சுத்தமே** - திருமந்திரம்

பிறவி எனும் பிணியை அறுக்கவும் பெருமானின் திருவடியை அடையவும் எல்லை இல்லா நிலைத்த இன்பத்தில் திளைக்கவும் வழிகாட்டுபவை சிவ ஆகமங்கள். செந்தமிழ்ச் சிவ ஆகமங்கள் இருபத்து எட்டு. சிவ ஆகமங்கள் சித்தாந்தச் சைவர்களின் சமயக் கொள்கைகளை விளக்குவனவாக உள்ளன. இச்சிவ ஆகமங்களை அருளியவர் சிவபெருமானே என்று மணிவாசகர் சிவபுராணத்தில் குறிப்பிடுகின்றார்.

பெரிய புராணத்தில், தெய்வச் சேக்கிழார் திருமூலதேவ நாயனார் புராணத்தில் (30) விளக்குவது, குளிர்ந்த நிலவணிந்த திருச்சடையையுடைய சிவபெருமான், தாம் அருளிய ஆகமப் பொருளை இந்நிலவுலகில் திருமூலர் வாக்கால் தமிழில் சொல்வதற்கு வாய்ப்பாக சிவயோகியார் உடலை மறைப்பித் தருளினார் என்று உணர்ந்தார். சடையார் என் உரைத்ததினால் தமது ஐந்து திருமுகங்களால் ஆகமம் அருளப்பட்டது என்பது தெரியவருகிறது. இதனையே இந்த பாடலில் விபரித்துள்ளார்.

**தண்ணிலவார் சடையார் தாம் தந்த ஆகமப்பொருளை**
**மண்ணின் மிசைத் திருமூலர் வாக்கினால் தமிழ் வகுப்பக்**
**கண்ணிய அத்திருவருளால் அவ்வுடலைக் கரப்பிக்க**
**எண்ணிறைந்த உணர்வுடையார் ஈசர் அருளென உணர்ந்தார்**
- பெரியபுராணம் 3584

**இனி திருமூலர் வாக்கால் ஆகமம் பற்றிய செய்திகளை அறிவோம்**
**அஞ்சன மேனி அரிவையோர் பாகத்தன்**
**அஞ்சொடு இருபத்து மூன்றுள ஆகமம்**
**அஞ்சலி கூப்பி அறுபத்து அறுவரும்**
**அஞ்சாம் முகத்தில் அரும்பொருள் கேட்டதே**
- திருமந்திரம் 68

அஞ்சொடு இருபத்து மூன்று (5+23) ஆகிய இருபத்தெட்டு சிவ ஆகமங்களையும் சிவபெருமான் தனது பேர் அருளின் கரணியமாக அருளோன் எனும் சதாசிவத் திருவடிவில் தனக்குள்ள ஐந்து திருமுகங்களில், உச்சித் திருமுகம் எனப்படும் அஞ்சா முகத்தின் வழி அருளினான் என்று திருமூலர் குறிப்பிடுகின்றார். பெருமான் ஆதியில் கல்லால மரத்தின் நீழலிலும், பின்பு மகேந்திர மலையிலும் அதன் பின்பு திருப்புறம்பியத்திலும் வெவ்வேறு காலகட்டங்களில் சிவ ஆகமங்களை அருளினார் என்றும் அவை மறைந்து போயின என்றும் திருமூலர் குறிப்பிடுகின்றார்.



சிவ ஆகமங்கள் மூன்று பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டுள்ளன. சிவ ஆகமங்களின் முதல் பகுதி திருக்கோயில் கட்டுதல், பெருமானின் திருவுரு அமைத்தல், நாள் வழிபாடு, சிறப்பு வழிபாடு போன்றவற்றைச் செய்ய வேண்டிய முதன்மைகளை வகுத்துக் கூறும் செய்கைப் பகுதி என இருக்கின்றது. இதனைக் கரும காண்டம் என்று வடமொழியில் குறிப்பிடுகிறார்கள்.

சிவ ஆகமங்களின் இரண்டாம் பிரிவானது மேற்கூறிய திருக்கோயில், திருவுரு, நாள் வழிபாடு, சிறப்பு வழிபாடு போன்றவற்றின் வழிபாட்டு முறைமையைப் பின்பற்றுதலை விளக்கும் பகுதியாக உள்ளது. இதனை உபாசனை காண்டம் என்று வடமொழியில் குறிப்பிடுகிறார்கள்.

சிவ ஆகமங்களின் மூன்றாம் பிரிவு திருக்கோயில், திருவுரு, நாள் வழிபாடு, சிறப்பு வழிபாடு போன்றவற்றின் உண்மைப் பொருளைத் தெளிவிக்கும் பகுதியாகவுள்ளது. இதனை ஞான காண்டம் என்று வடமொழியில் குறிப்பிடுகிறார்கள். இறைவன், உயிர், தளை என்கின்ற முப்பொருளின் உண்மையினைத் தெளிவிக்கும் பிரிவாகவும் இது விளங்குகின்றது.

**சிவமாம் பரத்தினில் சத்தி சதாசிவம்,**
**உமா மகேசர் உருத்திர தேவர்,**
**தவமால் பிரமீசர் தம்மில்தாம் பெற்ற,**
**நவஆகமம் எங்கள் நந்தி பெற்றானே** – திருமந்திரம் 62



உத்தரகோசமங்கை 3000 வருட இலந்தை மரம்

சிவம் என்னும் மேலான பரம்பொருளின் பேர் அருளால் அருளப்பட்ட சிவ ஆகமங்கள் இருபத்தெட்டில் ஒன்பது ஆகமங்கள் முக்கியமானவை. அவற்றை சிவமான பரம்பொருளிடம் இருந்து சத்தியும் சதாசிவமும், உள்ளத்துக்கு உகந்த மகேசர் (மரூஈசர்) , உருத்திரர், தவம் செய்த திருமால் மற்றும் பிரமன் ஆகியோர் பெற்றார்கள். இவர்களோடு நந்தியம்பெருமானும், அந்த ஒன்பது ஆகமங்களைத் தான் பெற்று நமக்கு உரைத்தான் என்று பாடுகிறார் திருமூலர்.

ஆகமம் என்றால் ஆகுதல் , சிவமாகுவதற்கான வழிமுறைகள் என்றும் பொருள்படும். இதன்படி ஒன்பது ஆகமங்களைப் பெற்ற நந்தியெம்பெருமானின் வழி நின்று பிரமநிலை, திருமால் நிலை, உருத்திரநிலை, உமா மகேசர் நிலை (உருவநிலை) என்று சதாசிவ நிலையை அடைதல் என்றும் பொருள்கொள்ளலாம்.

பெற்றநல் ஆகமங் காரணம் காமிகம்
உற்றநல் வீரம் உயர்சிந்தியம் வாதுளம்
மற்றவ் வியாமளம் ஆகும்கா லோத்தரந்
துற்றநற் சுப்பிரம் சொல்லு மகுடமே. - திருமந்திரம் 63

சிவம் என்ற பரம்பொருளின் பேர் அருளால் நந்தி எம்பெருமான் பெற்ற ஒன்பது சிவ ஆகமங்கள் காரண ஆகமம், காமிக ஆகமம், வீர ஆகமம், சிந்தம் ஆகமம், வாதுளம் ஆகமம், வியாமளம் ஆகமம், காலோத்தரம் ஆகமம், சுப்பிரம் ஆகமம், மகுடம் ஆகமம் என்பன என்று திருமூலர் குறிப்பிடுகின்றார். இந்தப்பாடலினூடு புலனாகிறது.

முதல் தந்திரத்தைக் காரண ஆகமத்தின் சாரமாகவும், இரண்டாம் தந்திரத்தைக் காமிக ஆகமத்தின் சாரமாகவும், மூன்றாம் தந்திரத்தை வீர ஆகமத்தின் சாரமாகவும், நான்காம் தந்திரத்தைச் சிந்தியாகமத்தின் சாரமாகவும், ஐந்தாம் தந்திரத்தை வாதுள ஆகமத்தின் சாரமாகவும், ஆறாம் தந்திரத்தை வியாமள ஆகமத்தின் சாரமாகவும், ஏழாம் தந்திரத்தைக் காலோத்திர ஆகமத்தின் சாரமாகவும், எட்டாம் தந்திரத்தைச் சுப்பிரபேத ஆகமத்தின் சாரமாகவும், ஒன்பதாம் தந்திரத்தை மகுட ஆகமத்தின் சாரமாகவும் ஆக்கித் தந்தார். பெருமானின் பேர் அருளே தம்மைச் செந்தமிழ் சிவ ஆகமங்களை மூவாயிரம் திருமந்திரப் பாடல்களாகப் பாடச் செய்தது என்பதனை,

**“என்னை நன்றாக இறைவன் படைத்தனன்,**
**தன்னை நன்றாகத் தமிழ் செய்யுமாறே”**
என்றும்,
**“மூலன் உரை செய்த மூவாயிரம் தமிழ்**
**ஞாலம் அறியவே நந்தி அருளது”**

என்றும் திருமூலர் சுட்டுவதன் வழி அறியலாம். இதனையே ஆகமம் ஆகி நின்று அண்ணிப்பான் என்று மணிவாசகரும் குறிப்பிடுகின்றார்

**நந்தி அருள் பெற்ற நாதரை நாடிடின்**
**நந்திகள் நால்வர் சிவயோக மாமுனி**
**மன்று தொழுத பதஞ்சலி வியாக் ரமர்**
**என்று இவர் என்னோடு எண்மரும் ஆமே.** திருமந்திரம்-67

நந்தி எம்பெருமானே பின்பு ஒன்பது சிவ ஆகமங்களைத் தமது எட்டு மாணவர்களுக்குப் போதித்தார். நந்தியெம்பெருமானிடமிருந்து பரம்பொருள் திருவருட்டுணையால் பொருள்மறை கேட்டுப் போற்றி ஒழுகும் மெய்கண்டார் (மாணவர்) நால்வராவர்.அவர்கள் சனகர், சனந்தனர், சனாதனர் மற்றும் சனற்குமாரர். அத்துடன் சிவயோக மாமுனிவர் , பதஞ்சலியார் எனப்படும் பாம்புக்கால் முனிவர் மற்றும் வியாக்கிரபாதர் எனப்படும் புலிக்கால் முனிவர் ஆகிய மூவர். அவர்களுடன் எட்டாவதாகத் தானும் (திருமூலர்)பெற்றார் என குறிப்பிடுகிறார் திருமூலநாயனார்.

பெருமானின் பேர் அருளால் உரைத்த சிவ ஆகமங்கள், இவ்வெண்மரால் உலகில் சிவமடங்கள் அமைக்கப் பெற்றுத் தங்களுடைய மாணவர்களுக்குப் போதிக்கப் பெற்றன. பெருமானிடம் தெளிவு பெற்ற சனற்குமாரர் அவரது மாணவர் சத்தியஞானதரிசினிகள் என்பாருக்குப் போதித்தார். சத்தியஞானதரிசினிகள் தம் மாணவர் பரஞ்சோதியாருக்குப் போதித்தார். பரஞ்சோதியார் ஞானம் புகட்டிய மாணவரே மெய்கண்டார். மெய்கண்டார், ஆசான் மாணவர் முறைமையில்தான் சைவ உலகினுக்கு மெய்கண்ட மரபும் பதினான்கு மெய்கண்ட நூல்களும் கிட்டின.

**மாதவம் செய்த தென்திசை வாழ்ந்திடத்**
**தீதுஇலாத் திருத்தொண்டத் தொகை தரப்**
**போதுவார் அவர்மேல் மனம் போக்கிடக்**
**காதல் மாதரும் காட்சியில் கண்ணினார்** - பெரியபுராணம்-25

மாதவம் செய்த தென்றிசை என்பது எல்லாப் புண்ணியங்களுக்கும் மேம்பட்ட புண்ணியமாகிய சிவபுண்ணியம் செய்ய ஏதுவாயுள்ள திசை, தென்திசையை என்ற கருத்து இங்கு புலனாகிறது. இதனாலே தென்னாடு ஒரு புண்ணிய பூமி எனப்போற்றப்படுகிறது.

**அந்தணா ளரும் ஆங்கது கேட்டவர்**
**பந்த மானிடப் பாற்படு தென்திசை**
**இந்த வான்திசை எட்டினும் மேற்பட**
**வந்த புண்ணியம் யாதென மாதவன்**- பெரியபுராணம் 30

அதாவது இந்த உலகப் பிணைப்புடன் பிறப்பு , இறப்பு என சாதாரண வாழ்க்கை வாழுகின்ற மாந்தர்க்கு எண்திசையிலும் தென்திசையை மேலானது என்பதற்கு போந்ததற்குரிய புண்ணியம் யாது என்ற வினாவிற்கு , திருமலைச் சிறப்பில் வரும் பாடல்கள் 31 தொடக்கம் 36 இனைக் கவனித்தால் , தென்திசையின் சிறப்பு என்ன என்று முனிவர்கள் உபமன்யுவிடம் கேட்க அவர் அளித்த பதிலை அழகான படலாக்கியுள்ளார் தெய்வச் சேக்கிழார்.

**நித்தன் நீடிய அம்பலத்தாடும் மற்று**
**இத்திறம் பெறலாம் திசை எத்திசை** - பெரியபுராணம் 32

அத்தகைய திருப்பதியின்கண் நம்மை ஆளாக உடைய அன்னையார் நாள்தோறும் விருப்புடன் பார்த்து மகிழுமாறு தில்லைமூதூர் திருச்சிற்றம் பலத்தில் ஆடுகின்ற என்றும் அழியாத நித்தன் திருவடியை தென்திசையன்றி வேறெந்தத் திசையில் காணலாம்.

**காதல் மங்கை இதயக் கமலமாம்**
**மாதொர் பாகனார் ஆரூர் மலர்ந்ததால்** - பெரியபுராணம் 33

எல்லாவுயிர்களிலும் உள்ளே மலரும் இதயத்தாமரையில் இறைவன் எழுந்தருளியிருப்பது போல், உலகமாகிய பூமாதேவியின் இதயத் தாமரையாக விளங்கும் திருவாரூரில் உமையொருபாகனார் தியாகேசப்பெருமானாய் எழுந்தருளியுள்ளார். இதுவும் தென்திசைகளின் பெருமைகளில் முக்கியமானது.

**கம்பை ஆற்றில் வழிபடு காஞ்சிஎன்று**
**உம்பர் போற்றும் பதியும் உடையது** - பெரியபுராணம் 34

இந்த ஏழு உலகங்களையும் படைத்த எம் தலைவியாகிய உமையம்மையார், தம்தலைவனாக காஞ்சிபுரம் கம்பையாற்றின் கரையில் இருக்கும் கச்சியேகம்பனாம் கம்பனெம்மானை வழிபட்ட திருவேகம்பம் இருப்பதும் தென்னாடே. இங்கு தேவர்களும் வந்து வழிபட்டுச் செல்லுகின்றார்களாம்.

**கங்கை வேணி மலரக் கனல்மலர்**
**செங்கை யாளர் ஐயாறும் திகழ்வது** - பெரியபுராணம் 35

நமக்கெல்லாம் குருநாதனாகிய நந்தியெம்பெருமான் தவம் செய்து, வளர்ந்து, நீடிய பேரருள் பெற்ற பொலிவினையுடையதாய், கங்கையை சடையில் வைத்தவரும் சிவந்த கைகளில் கனல் மலரவும் கொண்ட எங்கள் பெருமானார் விரும்பி உறைகின்ற திருவையாறும் தென்திசையிலே தான் இருக்கிறது.

**தேசம் எல்லாம் விளக்கிய தென்திசை**
**ஈசர் தோணி புரத்துடன் எங்கனும்**
**பூசனைக்குப் பொருந்தும் இடம் பல**
**பேசில் அத்திசை ஒவ்வா பிறதிசை** – பெரியபுராணம் 36

இவ்வாறு எல்லாத்தேசங்களையும் தனது தெய்வத்தன்மையால் விளங்கச்செய்திருக்கும் ஈசர் தோணிபுரத்திலும், அடியவர்கள் செய்யும் வழிபாட்டினை, பூசைகளை ஏற்றுக்கொவதற்கு உகந்த பல திருப்பதிகளிலும் விரும்பி உறைவதும் தென்திசையில் தான்.

மன்னுமாமலை மகேந்திரம் அதனில் சொன்ன ஆகமம் தோற்றுவித்தருளியும் என்ற மாணிக்கவாசகரின் வரிகளையும் இங்கு எடுத்துப் பார்ப்பது சாலவும் சிறந்தது. இப்படியாக தென் திசையில் தோன்றிய ஆகமமே இன்று பல வடிவில் பல இடங்களிற்கு சென்று வேறுமொழியில் எங்களுக்கு மீண்டும் தரப்படுகிறது. ஆதித் தமிழர்களிடமிருந்தே அனைத்தும் உலகிற்கு வழங்கப்பட்டவை என்பதை அடிக்கடி மறக்கும் தமிழர்களுக்கு இதுவும் ஒரு எடுத்துக்காட்டு ஆகும். ஆகவே ஆகமம் ஆகி நின்று அண்ணிப்பான் (அருகில் இருப்பான்) தாள்களை இறுகப்பிடித்து சிவமாகுவதற்கான ஆகம நெறிகளை படித்து மேலாக அதன்வழி நின்று பேரின்பப்பெருவாழ்வினை அடைவோமாக.

**தென்னாடுடைய சிவனே போற்றி**
**எந்நாட்டவர்க்கும் இறைவா போற்றி**

அண்ணாமலை சுகுமாரன்,
பாண்டிச்சேரி.

## சிவபூமியில் சிவனைத் தேடி – மட்டக்களப்பு கொக்கட்டிச்சோலை தான்தோன்றீச்சரம்

# கல் நந்தி புல் உண்ட அதிசயம்





சைவப்புலவர்
சுந்தரமூர்த்தி துஷ்யந்த்
கலைமாணி முதுகலைமாணி,
பிரான்சு

தொன்று தொட்டுச் சைவமும் தமிழும் குழுமி வளர்ந்த ஈழத்துப் புண்ணிய பூமியிலே பால், தயிர், தேன், பாடும் மீன் என்பவற்றுக்குப் புகழ்பெற்ற மட்டக்களப்பு மண்ணில் வரலாற்றுச் சிறப்பும், தொன்மையும் மிக்க புகழ்பூத்த முதன்மையான சிவன் கோவிலாக கொக்கட்டிச்சோலை தான்தோன்றீச்சரம் விளங்குகின்றது. இப்பதி மட்டு நகரிலிருந்து தெற்கே மண்முனைத்துறையினூடாகச் சுமார் 13 கி.மீ தூரத்தில் அமைந்துள்ளது. கொக்கட்டி மரங்கள் நிறைந்த சோலையில் சுயம்புலிங்கமாக மூர்த்தி எழுந்தருளியுள்ளமையால் இப்பதிக்கு கொக்கட்டிச்சோலை தான்தோன்றீச்சரம் என்ற நாமம் பெயர் உருவாயிற்று.

இப்பதியின் வரலாற்றினைப் பற்றிப் பல கர்ண பரம்பரைக் கதைகளிலும், கல்வெட்டுத் தகவல்களை அடிப்படையாகக் கொண்டு எழுதப்பட்ட மட்டக்களப்பு மான்மியம் எனும் வரலாற்று நூலிலும் இருந்து அறியக்கூடிய செய்திகள் உள்ளன. திருமூலர் இலங்கைத் திருநாட்டை 'சிவபூமி' எனும் சிறப்பித்தமைக்கு ஏற்றால் போல் கிழக்கிலங்கையிலும் சிவலிங்க வணக்கமே காலூான்றிக் கிடந்துள்ளது. அதற்கமைய கொக்கட்டி மரக்காட்டுச்சூழலில் தான்தோன்றியாய் அமைந்த லிங்கத்தை வேடர்கள் கொத்துப் பந்தலிட்டு நீண்ட காலமாய் வழிபட்டு வந்தனரென்பது நெடுங்காலச் செவிவழி மரபுக் கதையாகும். இது செவிவழி மரபுக்கதையாக இருப்பினும் தொன்மைக் காலத் தமிழர்களின் கொடிநிலை, கந்தழி, வள்ளி வணக்க முறையின் எச்சமே கொக்கட்டி மர அடியில் உருவான சிவலிங்க வழிபாடு. அதுவே பின்னாளில் திருத்தலமாக உயர்வு பெற்றது என்பதை ஊகித்துக் கொள்ள முடிகின்றது. இவ்வரலாற்றினைக் கொக்கட்டியார் மரபோடு திருவேட்டைக்காவியம் தொடர்புபடுத்திக் கூறுகின்றது.

மற்றும் மட்டக்களப்பு மான்மியத்தில் வரும் 'பெரிய கல்வெட்டு' பாடலில் மண்முனைப் பிரதேசத்தை ஆட்சி புரிந்த உலகநாச்சி எனும் அரசியால் அமைக்கப்பட்ட இரு சிவாலயங்களுள் ஒன்று கொக்கட்டிச்சோலை கோயில் என்று கூறப்படுகின்றது. மேற்படி கூறப்பட்ட தகவல் மகாவம்ச நூலிலும் ஒத்திருக்கிறது. பெரிய கல்வெட்டுத் தகவலின்படி "ஒரிசா நகரில் இருந்து அனேக குடும்பங்களை அழைத்துக் காப்பு முனைக்காட்டை அழித்துச் செப்பனிட்டுக் குடியேற்றி, அப்பதிக்கு அரசனாக்கி மண்முனையென பெயர்சூட்டி வாழுங்காலம் காப்பு முனைக்குத் தென்பாகமாயுள்ள காடுகளை அழிக்கும் போது திகடன் என்பவன் கொக்கட்டி மரத்தை வெட்ட உதிரம் பாய்ந்தது.

அதைக் கண்ட திகடன் தனது உடைத்துகிலால் மரத்து வெட்டு வாயைக் கட்டி வைத்துவிட்டு வந்து உலகநாச்சியிடம் செய்தியைக் கூறினான். உலகநாச்சியும் அந்த இடத்திற்குச் சென்று பார்த்த போது மரத்தடியில் ஒரு லிங்கம் இருந்தது. உலகநாச்சி வனத்தினை அழித்து, இலிங்கத்தின் தூசி நீக்கி ஆலயமியற்றி, வடநாட்டுக் கொல்லடத்திலிருந்து பட்டர் மூவரை வரவழைத்துப் பூசை புரியும்படி அமர்த்தினார்" என்று சொல்லப்பட்டிருக்கிறது.

### புல் உண்ட கல் நந்தி - அதிசயம்

போர்த்துக்கேயர் இலங்கையைக் கைப்பற்றி கிழக்கில் ஆதிக்கம் செலுத்திய காலகட்டத்தில் பல சைவக் கோயில்கள் இடித்தழிக்கப்பட்டன. இந்நிலையில் இந்தக் கோயிலையும் போர்த்துக்கேயர் முற்றுகையிட்டனர். அப்போது கோயிலைச் சுற்றிப் பார்த்த போர்த்துக்கேயத் தளபதி கல்லில் செதுக்கிய நந்தியை கண்ணுற்று, இந்த நந்தி புல் உண்ணுமா என்று பூசகரிடம் வினாவினான். அதற்கு பூசகர் இந்நந்தி ஒரு நாளைக்கு ஒரு தடவைதான் புல் உண்ணும், இன்றைக்கு ஏற்கனவே உண்டுவிட்டது எனக்கூறினார்.தளபதி நாளை வருகின்றேன் என்று கூறி மறுநாள் வந்து நிற்க பூசகர் நந்திக்கு புல் கொடுக்க அது உயிர் பெற்று எழுந்து புல்லை உண்டு பின் சாணம் போட்டு அதன்பின் மீண்டும் கல் நந்தியானது. இதனைக் கண்ணுற்ற தளபதி இந்தக்கோவிலை அழிக்காது விட்டான் என்று இன்றும் செவி வழிக்கதைகள் கூறுகின்றன. இதற்குச் சாட்சியாக இன்றும் அந்த நந்தி காட்சி தருகின்றது.

### கட்டட அமைப்பு

இக்கோயிலில் காலத்துக்குக் காலம் திருப்பணி வேலைகள் நடைபெற்று வந்துள்ளன. அதனால் அதன் கட்டட அமைப்பும் ஏனைய நுண்கலை மரபுகளும் அவ்வப்போது மாற்றமடைந்துள்ளன. இதன் அமைப்பினை நோக்கும் போது அது பாண்டியர் கால முறைமையில் அமைந்ததென்று பெரும்பாலான வரலாற்றாசிரியர்கள் கூறுகின்றனர். தொல்லியர் ஆய்வாளர் க. தங்கேஸ்வரி அவர்களின் கூற்றுப்படி ஆலயத்தின் ஆதிமூலம், அந்தராளம், அர்த்தமண்டபம் என்பன பாண்டியர் காலத்திற்குரியது என்கிறார்.எனவே இந்தக் கோவிலின் நிலையான கட்டடம் கி.பி 11 ஆம், 12 ஆம் நூற்றாண்டு காலத்தில் அமைக்கப்பட்டதாக இருக்க வேண்டும் எனக் கருதமுடிகிறது.

பழைய கோயிலில் இரண்டு சுற்றுமதில்கள் மற்றும் சிவன் கோயிலுடன் சேர்ந்து வடக்கில் அம்மன் கோயில், பிள்ளையார் கோயில் மற்றும் முருகன் கோயில்கள் என்பனவும் இருந்தன.1978 ஆம் ஆண்டு ஏற்பட்ட சூறாவளியில் பாதிப்படைந்த இக்கோயிலில் பரிவாரத் தெய்வங்களுக்கான சன்னதிகள் , இராச கோபுரம், மணித்தூண்கள் என்பன புதிதாக அமைக்கப்பட்டு, 1998ஆம் ஆண்டு குடமுழுக்கு இடம்பெற்றதோடு, அதன் நினைவாக 'தேரோட்டம்' எனும் சிறப்பு மலரும் வெளியிடப்பட்டது.

மற்றும் கோயிலின் விமானம், கோபுரம் ஆகிய உறுப்புக்களில் சிற்பாகமம் விதிமுறைகளைத் தழுவிய சிற்பங்களும், மண்டபச் சுவரில் தல வரலாற்றுடன் தொடர்புடைய அழகான ஓவியங்களும் தீட்டப்பட்டுள்ளன. கோயிலின் தேரோட்ட நிகழ்விற்கு சித்திரத் தேர், பிள்ளையார் தேர் என இரண்டு தேர்களும் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளன.

### பூசைகளும், விழாக்களும்

நாள்தோறும் மூன்று வேளை பூசையும் மேலாக சுக்கிரவாரப் பூசையும் சிறப்பாக நிகழ்ந்து வருகின்றது. கோயிலின் வருடாந்த திருவிழா ஆவணி உத்தரம் நாண்மீன் அன்று கொடியேற்றப்பட்டு நிறைமதியை அடுத்து வரும் ஞாயிறு தேரோட்டமும், மறுநாள் நீராடற் திருவிழாவும் என 16 நாட்கள் திருவிழா நடைபெறும். தேரோட்டத்தை அடுத்து மறுநாள் அதிகாலை திருவேட்டை நிகழ்ச்சி நடைபெறும். அதில் திருவேட்டைப்பதிகம் பாடப்படும். அதனைத் தொடர்ந்து மட்டு மண்ணில் வாழும் ஏறத்தாள 140 சாதிப்பிரிவுகளுக்கும் திருக்குடுக்கை (முட்டி) வழங்கி கௌரவிக்கும் திருவருட் படையல் நிகழ்வு நடைபெறும். இவை கலிங்க மாகோன் வகுத்த சட்டமாகும். இதனாலேயே இக்கோயிலை 'தேசத்துக் கோயில்' என்றும், 'திருப்படைக் கோயில்' என்றும் புகழ்ந்து பேசுவர்.

இவை தவிர தைப்பொங்கல், மாசிமகம், சிவனிரவு , சித்திரை வருடப்பிறப்பு, ஆனி உத்தரம், ஆடி மறைமதி திருக்கார்த்திகை, பெருங்கதை விரதம், திருவாதிரை ஆகிய விழாக்களும் விரதங்களும் கொண்டாடப்பட்டு வருகின்றன. மற்றும் இங்குள்ள மக்களின் வாழ்வியலோடு தொடர்புபட்ட புதிரெடுத்தல், புதிறுண்ணல், கறியமுது படையல், மழை வேண்டி அமுது செய்தல் முதலிய காரியங்களையும் இவ் ஆலய வழிபாட்டுடன் தொடர்புபடுத்தி நீண்ட காலமாக கொண்டாடி வருவதையும் காணலாம். இங்கு சங்கமர் எனும் வீரசைவ மரபில் வந்த குருக்கள் மாரே பூசைகளை நிறைவேற்றி வருகின்றார்கள். பொதுவாக இந் நடைமுறை நெடுங்காலமாக கைக்கொள்ளப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது.

### மாகோன் வகுத்த வன்னிமை

இக்கோயிலுக்கு குளக்கோட்டன், விமலதர்ம சூரியன், விக்கிரம சிங்கன் போன்ற மன்னர்கள், உலகநாச்சி எனும் அரசி போன்றவர்கள் ஆதரவு பல நல்கியிருந்தாலும், குளக்கோட்டன் குறிப்பாகத் திருகோணமலை மண்ணில் பல திருக்கோயிற் திருப்பணிகள் புரிந்தது போல மட்டக்களப்பு கோயில்களுக்கு மாகோன் புரிந்த மகத்தான பணிகள் தலை சிறந்தவை. மட்டக்களப்பு மான்மியம் எனும் நூலில் வரும் குளிக்கல்வெட்டு, பெரிய கல்வெட்டு, பங்குகூறும் கல்வெட்டு, சாதித் தெய்வ கல்வெட்டு, ஆசாரிகள் கல்வெட்டு முதலிய பாடல்களில் மாகோனின் நடைமுறைகள் விளக்கப்பட்டுள்ளன. 'முக்குகர் வன்னிமை' என்ற பகுதியில் கொக்கட்டிச்சோலைக்கு ஏற்படுத்திய கோயில் நடைமுறைகள் குறிப்பிடப்பட்டுள்ளது.

**"சீர்தாங்கு வில்லவரும் பணிக்கனாரும்
சிறந்த சட்டிலான், தனஞ்சயன்றன்
கார்தாங்கு மாளவன், சங்கு பயத்தன்
கச்சிலாகுடி முற்குகரின் மேழேகாண்"**

முற்குகரின் ஏழுகுடிகளான வில்லவன், பணிக்கன், சட்டிலான், தனஞ்சயன், மாளவன், சங்கு பயத்தன், கச்சிலான் ஆகியோர் கோயில் நிர்வாகத்திற்குப் பொறுப்பானவர்கள். இவர்களின் நடைமுறைகள் இன்றுவரை கடைப்பிடிக்கப்பட்டு வருவதையும் அவதானிக்கலாம். கோயிலின் அன்றாட நடைமுறைகளைச் செயற்படுத்துவதற்கு முற்குகர் குல வண்ணக்கர் மூவர் தொன்று தொட்டு நியமிக்கப்பட்டு வருகின்றனர். எல்லாச் சாதியினருக்கும் கோயில் திருத்தொண்டு செய்வதற்கும் திட்டம் வகுத்திருந்தான் என்பதை

**"சொல்லரிய விளக்கேற்றல் பூவெடுத்தல்
தூசகற்றல் சாணமிடல் அணிவிளக்கல்
நல்ல மலர் மாலை கட்டல்..."**

என்ற நீண்ட கல்வெட்டுப்பாடல் சான்றுரைக்கின்றது.

### கோயில் இலக்கியங்கள்

ஈழத்தின் பழமைமிக்க சிவ ஈச்சரங்களில் கொக்கட்டிச்சோலை தான்தோன்றீச்சரமும் ஒன்று. கிழக்கிலங்கை மக்களின் பழைமையும் பத்தியும் மிக்க கோயிலாகவும், திருப்படைக் கோயில்களில் மூத்த கோயிலாகவும், சிறப்புமிக்க பாரம்பரியங்களைக் கொண்ட கோயிலாகவும் அடையாளம் பெற்றுள்ளது. இலங்கையில் தான் தோன்றி ஈச்சரங்கள் இரண்டு உள்ளன. அவற்றுள் ஒன்று முல்லைத்தீவு மாவட்டத்தில் அமைந்துள்ள ஒட்டுசுட்டான் தான்தோன்றீச்சரம் மற்றையது மட்டக்களப்பு மாவட்டத்தில் அமைந்துள்ள கொக்கட்டிச்சோலை தான்தோன்றீச்சரம். மற்றும் மட்டுநகரில் தேரோடும் முதற்சிவத்தலம் என்ற பெருமையையயும், வீரசைவத் தமிழ் மரபை நீண்ட காலம் தொட்டு விளக்கி நிற்கும் திருக்கோயிலாகவும் விளங்கி நிற்பதையும் காண முடிகின்றது.

**தென்னாடுடைய சிவனே போற்றி
எந்நாட்டவர்க்கும் இறைவா போற்றி**

ஆக்கம்: சிவத்திரு.க.சி. குலரத்தினம்
தொகுப்பு: சிவத்திரு.வ. கங்காளன்

என்னை என்னறிவித்த எங்கள் குருநாதன் - இந்தப் பாடல் இலங்கை நாடு முழுவதும் சைவ மக்கள் மத்தியில் ஒலித்த காலம் இருந்தது. இந்தப் பாடலை அருளிச் செய்தவர் யாழ்ப்பாணத்து யோகர் சுவாமிகள். அந்த யோகர் சுவாமிகளுடைய குருநாதன் செல்லப்பா சுவாமிகள். செல்லப்பர் ஒரு சீவன் முத்தர். சீவன் முத்தர் என்றால் உடலில் உயிர் தங்கி இருக்கும் போதே முத்தி அடைந்தவர் என்பது கருத்து. சீவன் முத்தருடைய இலக்கணத்தை பின்வரும் பாடல் மூலம் பார்ப்போம்.

**காம மாதிகள் வந்தாலும் கணத்திற்போம் மனதிற்பற்றார்
பாமரரெனக் காண்பிப்பார் பண்டிதத் திறமை காட்டார்
தாமரை இலைத் தண்ணீர்போல் சகத்தொடும் கூடிவாழ்வார்
ஊமருமாவார் உள்ளத்துவகையாம் சீவன் முத்தர்.**

இந்தப் பாடலில் உள்ள இலக்கணங்களோடு யாழ்ப் பாண மண்ணில் நடமாடியவர்தான் செல்லப்பா சுவாமிகள். ஆனால் மக்கள் அவருக்கு மக்கள் இட்ட பெயரோ விசர்ச் செல்லப்பா. மக்களின் தவக் குறைவை நோகாமல் இருக்க முடியவில்லை. இன்றைய மக்களும் தவ வாழ்வையும், அறம் சார்ந்த வாழ்வையும் வாழ முன்வரவேண்டும். அதுவே எம் துன்பங்களுக்கெல்லாம் முடிவைத் தரும் என்பது திண்ணம். இனி செல்லப்பா சுவாமிகளின் திருக்கதையை, அற்புதங்களை ஓரளவு அறியப் புகுவோம்.

நல்லூர்த் தேரடிக்குத் தென்புறத்தில் வயல் நிலங்கள் இருந்தன. பத்தொன்பதாம் நூற்றாண்டின் நடுப்பகுதியில் வட்டுக்கோட்டையைச் சேர்ந்த வல்லிபுரம் என்னும் வேளாளன், நல்லூரைச் சேர்ந்த பொன்னம்மா என்னும் பொன்னாரை மணந்து, வயலோரத்தில் சிறு வீடு அமைத்து வேளாண்மை செய்து வாழ்ந்துவந்தார்.

அவர்களுக்கு ஆண்கள் இருவரும், பெண்கள் இருவருமாகப் பிள்ளைகள் நால்வர் பிறந்தனர். ஆண்களுள் ஒருவரின் பெயர் செல்லப்பா, பெண்களுள் ஒருத்தியின் பெயர் செல்லாச்சி. செல்லப்பா இளமையில் கந்தமடத்துச் சைவப் பிரகாச வித்தியாசாலையில் ஆரம்பக்கல்வி கற்றபின், யாழ்ப்பாணம் மத்திய கல்லூரிக்குச் சென்று ஆங்கிலங் கற்று வந்தார். ஓரளவு கல்வி கற்றபின் குடும்பச் சூழ்நிலை காரணமாகப் படிப்பை நிறுத்தி, வேலை பார்க்க வேண்டியவரானார். யாழ்ப்பாணக் கச்சேரியில் ஆராய்ச்சி யாளராக வேலை பெற்று, வெகு திறமையாகக் கடமை யாற்றிய காலத்தில் அதிகாரிகளின் விருப்புக்குள்ளாகி களஞ்சியப் பொறுப்பதிகாரியாகவும் இரு வேலைகள் பார்த்து வந்தார்.ஆங்கிலேயர்கள் பாராட்டும் அளவு மதிப்புடன் வேலை பார்த்து வந்த செல்லப்பரின் போக்கு, எல்லோருக்கும் ஒரு புதிராகவே இருந்து வந்தது.

செல்லப்பர் தனது வேளையில் கண்ணும் கருதுமாகவும், நேர்மையாகவும், திறமையாகவும், ஒழுங்காகவும் அதிகாரிகள் மெச்சும் வகையில் பார்த்து வந்த காலத்தில், அரச வேலையின் ஆதிக்கம் மற்றும் செல்வாக்கு முதலிய சிறப்புக்களில் மனங்கொள்ளாது வாழ்ந்து வந்தார். ஞான நாட்டங் கொண்ட செல்லப்பரின் நடையுடை பாவனை களில் நாளிலும் பொழுதிலும் மாற்றங்கள் உண்டாயின. நல்லூரானை ''பிதாவே பிதாவே'' என்று பிதற்றியும் வந்தார். உள்ளே ஊறிவந்த ஞானப் பெருக்கு வெளியே வழியத் தொடங்கிய வேளையில் அவரின் போக்கு பித்தர் போலவும், பேய் பிடித்தவர் போலவும், குழந்தை போலவும் இருந்தது. தமக்குள்ளேயே பேசிக்கொள்ளுதல், "ஓமோம்" என்று தலையசைத்தல், வலக்கையை மேலே உயர்த்தி விசுக்கி உரத்துப் பேசி, வருவோர் போவோரைத் தம்மை அண்டவிடாது துரத்தி வந்தார். அவர் தமக்கு அண்மையிற் சென்றோரைத் துரத்தத் தொடங்கிய காலத்திலேயே தமது வேலையை கணக்கில் எடுக்காது, கச்சேரித் தொடர்பையும் துண்டித்துக் கொட்டிலின் மூலையில் குந்தியிருக்கத் தொடங்கினார்.


முத்தியானந்தர் என்று சொல்லப்படும் கடையிற் சுவாமிகளே செல்லப்பா சுவாமிகளுடைய குரு என்று அறிவோம். செல்லப்பருடைய வாழ்க்கை இரவு பகலாக நல்லூர்த் தேரடியிலேயே நிகழ்ந்தது. இரவு பத்து மணியானதும் அதாவது ஊர் அடங்கிய பின்பு மெல்ல எழுந்து முருகன் சந்நிதிக்குச் செல்வார். தந்தையே, தந்தையே என்று முருகனிடம் பேசுவார். இப்பேச்சு அதிகாலை நான்குமணி வரை நிகழும் சுவாமி முத்தியா னந்தர் (கடையிற் சுவாமிகள்) தினமும் நல்லூர் முருகனுடைய வீதியால் ஓடிச் சென்று மறைவதை இவர் பார்த்துள்ளார், இவர் தன்னுடைய குருநாதராக இருக்க வேண்டுமென மனதில் தீர்மானித்தார். தான் அவரைப் பார்க்கப் போகும்போது வெறுங்கையோடு போகக் கூடாது என்று ஒரு வெள்ளி ரூபாவை தேடிப் பாதுகாத்து வந்தார்.

ஒருநாள் கடையிற் சுவாமிகள் வீதியால் ஓடி வாசலில் வரும்போது செல்லப்பர் கண்டுவிட்டார். சுவாமியை நோக்கி ஓடிச் சென்றார். கடையிற் சுவாமி ஓடி மறைந்து விட்டார். கவலையுடன் சென்று பார்த்தார். குரு வந்த இடத்தில் தான் சந்திப்பது சரியல்ல. குருவைத் தேடிச் சென்று தரிசிப்பது தான் முறை என்று மனத்தைத் தேற்றிக் கொண்டார்.

ஒருநாள் கடையிற் சுவாமிகளைத் தரிசிப்பதற்காகச் செல்லப்பர் புறப்பட்டார். செல்லப்பர் தூரத்தே வருவதைக் கடையிற் சுவாமிகள் பார்த்து விட்டார்கள். கடையிற் சுவாமிகள் பக்கத்திலிருந்த கடலைக்காரியிடம் ஒரு முழு ரூபாய் வாங்கி வெற்றிலையில் மடித்து வைத்துக் கொண்டார். செல்லப்பர் கடையிற் சாமியின் பாதங்களில் வீழ்ந்து வணங்கினார். கடையிற் சுவாமிகள் செல்லப்பரை எழுப்பி அவரது கையில் வெற்றிலை மடிப்பில் இருந்த முழு ரூபாவை வைத்தார். தனது கையிலிருந்த குடையை செல்லப்பருடைய தலையில் வைத்தார். செல்லப்பருக்கு வானம் பூமி எல்லாம் சுழல்வது போல இருந்தது. கடையிற் சுவாமிகள் செல்லப்பரைப் பார்த்து ஓடடா என்று கூறி னார். செல்லப்பர் வந்து நல்லூர் தேரடியில் பதினைந்து நாட்கள் ஆடாமல் அசையாமல் இருந்தார். இப்பொழுது செல்லப்பர் செல்லப்பா சுவாமிகளாகவே ஆகிவிட்டார்.

செல்லப்பரைப் பொதுமக்கள் செல்லமாக விசர்ச் செல்லப்பர் என்றுதான் அழைத்து வந்தனர். அதற்குக் காரணம் அவர் தன்னை விசரன் போல் காட்டிக் கொண்டமை தான். குருவருள் பெற்ற பேற்றினாலே புறக்கோலம் நீங்காமலே அந்தக் கரணசுத்தி பெற்று, பசுகரணங்கள் பதி கரணங்களாக மலரப் பெற்றார். முன்னர் மூலையில் முடங்கிக்கிடந்தவர், குருவருள் ஒளியினால் முச்சந்திக்கு வந்தாற்போலத் தேரடியில் வந்து குந்தியிருந்து வருகின்ற அனைவரும் வணங்கக் கூடியவராயிருந்தார்.தேரடியிற் குந்தியிருந்து சிந்திக்கத் தொடங்கிய காலத்திலேயே அடியார்கள் பலர் அவரிடம் ஏதோ அற்புத சத்தியுண்டு என்று அவரைச் சூழ்ந்து மொய்க்கத் தொடங்கினார்கள். அதேவேளையில் அவர் தமக்குள்ளே சிந்தனைப் பேச்சுக்களை முணுமுணுக்கக் கண்ட சிறுவர்கள், விசரன் என்று கூறிக் கல்லெறியவுந் தொடங்கினர்.அதனால் உறவினர் அவரை விலங்கில் மாட்டி வைத்ததும் உண்டு .

உள்ளத்தில் எழுந்த துறவு மனப்பான்மையால் உலகத்தை அறவே துறந்த செல்லப்பா சுவாமிகள், வெளியுலகத்தவருக்கு விசரனாகவும், ஆன்ம ஈடேற்றங் கருதிய பெரியவர்களுக்கு ஞானியாகவும் காட்சியளித்தார். அவர் பொது மக்களிடம் வாங்கிய பட்டத்துக்கமைய மேலும் பைத்தியக் கோலத்தை மிகைப்படுத்தி வந்தார். தலைமுடியைப் பரட்டையாகத் தொங்கவிட்டு, நீராடுதலை வெகுவாகக் குறைத்து, தண்ணீர் படாத கந்தைத் துணிகளை அழுக்கோடு அலங்கோலமாக அணிந்து, கண்ட படி கையுயர்த்திச் சிரித்து, ஒட்டியுலர்ந்த உடம்பின் மெலிந்த




முகம் மலர, உதட்டை விட்டு வெளியே மிதந்து தோன்றிய பற்கள் புறந்தெரிய செல்லப்பா சுவாமிகள் காட்சியளித்தார்.

இவ்வாறாக உடன்பிறந்த சகோதரி செல்லாச்சி சகோதர பாசத்தால் ஈர்க்கப் பெற்று உரிய வேளைகளில் உணவுகளை கொண்டு சென்று, கூவியழைத்தால், "போ! போ! கொண்டு போ, நீ நஞ்சு போட்டுக் கொண்டு வந்தாய்" என்று தட்டிக் கலைத்துவிட்டு, எழுந்து எட்டி எட்டி நடந்து நெடுந்தூரம் சென்று, மீண்டும் வந்து குந்தியிருப்பார். தமக்கு விருப்ப முள்ளபோது ஏதாவது உண்டு, பெரும் பகுதியைக் காகம், கோழி, நாய் உண்ணுமாறு வைத்து வேடிக்கை பார்ப்பார். உயிரினங்களோடு உறவு கொண்டாடியும் வந்தார்.

பகல் முழுவதும் விசர்க்கோலம் கொண்டிருக்கும் செல்லப்பா சுவாமிகள், இரவில் இரவுப் பூசை நிறைவுற்று எல்லோரும் அகன்றபின், மெதுவாக இருக்கை விட்டெழுந்து, கோபுரவாசற் பக்கம் சென்று, முருகனைத் தேடுவார். "பிதாவே! பிதாவே!!" என்று முருகனைக் கூவியழைத்து, அவருடன் சொல்லெதிர் பெற்றும் பெறாமலும் உரையாடி வந்தார். அவரின் உள்ளத்தில் முத்துப்போன்ற சிந்தனை வாக்கியங்கள் உருண்டு திரண்டு வெளிவரக் காத்திருந்தன. பக்குவமுள்ள சீடன் ஒருவன் வருவான் அவன் காதில் இந்த மகா வாக்கியங்களை வார்த்துவிடலாம், அவன் மூலம் இவ்வாக்கியங்கள் சுருதியென எல்லோருக்கும் கேட்கும், எங்கும் கேட்கும் எனக், கருதிச் சீடன் வரவுக்குக் காத்திருந்தார்.

சுவாமிகளின் முகத்தில் ஒளிவட்டம் வீசுவதையும் அவரின் அழுக்கேறிய உடம்பில் கந்தையாடை அலங்கோல மாகக் கிடந்ததையும் கண்டு, மெய்யடியார் ஒருவர் தாம் புதிதாக வாங்கி வந்த வேட்டியையும் சால்வையையும் எடுத்துச் சென்று, சுவாமிகளைத் தொழுது, பணிந்து ஏற்றருள் செய்தல் வேண்டும் என்று இரந்தார். சுவாமிகள் அவர் மீது இரங்கி அவற்றை வாங்கிக் கிழித்து அழுக்குப் படுத்தி அலங்கோலமாக அணிந்து "சரி நீ போகலாம்" என்று விடைகொடுத்தனுப்பினார்.

சித்தத்தைச் சிவன்பால் வைத்தவர்கள் சித்தர்கள். அவர்கள் இறையருளாலும் மனித சத்திக்கு அப்பாற்பட்ட சித்து விளையாட்டுக் காட்டுவதும் உண்டு. அத்தகைய சித்துக்கள் சுவாமியிடம் வந்ததும், அவர் வெளி வெளியாக, "செல்லப்பன் சாமி காட்டமாட்டான் விசரன் என்று பெயர் வாங்கிப் போவான்" என்று கூறியதும் உண்டு. எப்படிப்பட்ட சித்தர்களுக்கும் சில சமயம் அவர்களை அறியாமலே சித்துக்கள் தலை காட்டிப் போவதுமுண்டு.

செல்லப்பா சுவாமிகளிடம் அன்பு கொண்டிருந்த குருக்கள் ஒருவர், திருநெல்வேலியிலிருந்து இறைவனுக்கு படைத்த அமுதினை பக்குவமாகக் கொண்டு வந்து நீட்டியபோது அவரின் பத்தியை மெச்சிய போதிலும், அதனை வாங்கியுண்ண விரும்பாமல் ''கொண்டு போங்கள் உது எச்சிற்படுத்தப்பட்ட அமுது எனக்கு வேண்டாம்.'' என்று கூறினார். குருக்கள் ஏமாற்றமும் வியப்பும் அடைந்து வெட்கித் தலை குனிந்தவாறு வீடு சென்று, அமுது எச்சிற் படுத்தப் பட்டதா? என விசாரித்தபோது, அங்கே குழந்தை கள் அதை அசூசிப்படுத்தியதாக அறிந்து வியந்துபோனார்.

சுவாமிகள் நல்லூருக்கு மேற்கில் உள்ள வைமன் வீதி வழியாகப் போனபோது, எதிர்ப் பக்கமாக இளைஞன் ஒருவன் நன்றாக முறுகி வளர்ந்த காளை மாட்டுடன் மிடுக்காக வந்து கொண்டிருந்தான். காளையின் போக்கைக் கவனித்த சுவாமிகள் "குத்தவல்லவோ போகிறது மெத்தக் கவனம்'' என்றார். இளைஞன் விசரன் பேச்சு என்று உதாசீனமாகப் போனபோது, காளை மிரண்டு திரும்பி எதிர்த்து அவனைத் தாக்கி வீழ்த்தியது.

சுவாமிகளின் சகோதரியார் குடும்பத்தில் குழந்தை யொன்றுக்குக் கடும் சுகவீனமானபோது, அயலில் பெயர் பெற்றிருந்த மருத்துவரிடம் காட்டி, உயர்ந்த மருந்து எடுத்துப் பருக்க முயன்றபோது, குழந்தை மருந்துண்ண மறுத்து, ஓடிச் சென்று சுவாமிகளின் மடியில் வீழ்ந்து கிடந்தது. சுவாமிகள் குழந்தையைத் தேற்றி, தமது கொட்டிலின் முற்றத்தில் வளர்ந்த தோடையில் கனி பறித்துக் கரைத்துப் பருக்கியதும், குழந்தையின் கடுமை யான நோய் உடனடியாகத் தணிந்து, அடுத்த நாள் பூரணமாகக் குணமாயிற்று.

செல்லப்பா சுவாமிகள் உண்பதற்கு உணவை எடுத்துக் கொண்டு நடந்தபோது, நாய்க்குட்டியொன்று அவரின் காலடியை நக்கியவாறு பின்தொடர்ந்தது. அதன் வினைப் பலனை உடனடியாக உணர்ந்த சுவாமிகள், தாம் கொண்டு சென்ற உணவில் ஒருபகுதியை எடுத்து நாய்க்குட்டிக்கு குனிந்து வைத்துவிட்டு, "நீ உண்டபின் உன் வழியே போ' என்று விடைகொடுத்தார். நாய்க்குட்டி உண்ட பின் நடந்து போன வழியில் வண்டி நெரித்து உடனடியாக இறந்து போயிற்று.

செல்லையாப்பிள்ளை என்பவர் ஐந்து பெண் பிள்ளை களுக்குத் தந்தை. தனக்கு இறுதிக்கடன் செய்வதற்கு ஆண் பிள்ளை இல்லையே என்ற கவலையால் வருந்தி, செல்லப்பா சுவாமிகளிடம் வந்து அவரை இறுகக் கட்டிப்பிடித்து சுவாமி! எனக்கு ஆண் குழந்தையொன்று வேண்டும். அருள் செய்த பின்னரே இந்தப் பிடியை விடுவேன்'' என்று கூறினார். "செல்லையா உனக்கு ஆண் குழந்தை கட்டாயம் பிறக்கும். விடு விடு'' என்று விடுவித்துக் கொண்டார். செல்லையருக்கு அடுத்த ஆண்டு ஆண் குழந்தை பிறந்தது.

சுவாமிகள் ஒரு நாள் அவசரம் அவசரமாக உலை வைத்துக் காற்படி அரிசி கொண்டு சோறாக்கி, ஒரு கறியும் காச்சியபின், தென்னங் கிடுகுகளை மணல் தரையின் மேல் பாய் போல் பரப்பியபின், ஐந்து வாழையிலைகளில் சமைத்த உணவை படைத்து தயார் செய்த வேளையில் நான்கு பேர்கள் அவரைத் தேடி வந்தார்கள். "உங்களை எதிர்பார்த்து தான் உணவு படைத்தேன்'' என்று கூறி ஐவருமாகக் காற்படியரிசிச் சோற்றை வயிறு நிரம்ப உண்டு மகிழ்ந்தார்கள். காற்படி அரிசியில் ஐவர் வயிராற உண்டதும் சுவாமியின் அற்புதமே.

நன்னியர் என்பார் சுவாமிகள் மீது கொண்ட பத்தி மிகுதியால் அவரை இறுகப் பிடித்து மரத்திற் கட்டி வைத்து நல்ல முறையில் நீராட்டினார். "எட எட நீ நல்லூ ரானுக்கு அபிடேகஞ் செய்தது போதும் போதும் அவிழ்த்து விடு" என்று மன்றாடி விடுவித்துக் கொண்டு ஓடினார்.

செல்லப்பன் சாமி காட்டமாட்டான் என்று அவர் வெளி வெளியாகக் கூறியதையும் பொருட்படுத்தாமல் அடியவர்கள் கூட்டம் அவரை மொய்த்துச் சூழத்தொடங்கி யது. நெடுந்தூரத்திலிருந்தும் அடியவர்கள் வரத் தலைப் பட்டனர்.

கொழும்புத்துறை, திருஞானசம்பந்தர், இராமலிங்கர் துரையப்பர், பொன்னையர், கந்தமடத்து ஆறுமுகம், இளைய தம்பி, தாமோதரம்பிள்ளை, கம்பந்தறை முருகேசு முதலானோர் சுவாமிகளை மொய்க்கத் தொடங்கினர். தமது அன்பர்கள் எனவுணர்ந்து அவர்களோடு அன்பாகப் பேசிய அவர், சீடருள் சிலர் உலகத்தைத் துறந்து சந்நியாசி யாகப் போவதாகக் கூறினால், '' உனக்கும் அதற்கும் வெகு தூரம் ஓடிப்போய் கலியாணம் முடி'' என்று துரத்துவார். சிலர் சுவாமி என்னைக் கலியாணம் முடிக்குமாறு உறவினர் நெருக்குகிறார்கள் என்று அனுமதி கேட்டாற்போல விண்ணப்பித்தால், "ஏன் என்னைக்கேட்டோ நீ கலியாணம் முடிக்க வேண்டும். ஓடு ஓடு'' என்று துரத்துவார்.

முல்லைத்தீவில் வாழ்ந்த பெருங்கமக்காரன் ஒருவர் செல்லப்பா சுவாமிகளின் சிறந்த சீடர்களில் ஒருவராக ஒழுகியவர். அவர் சுவாமிகளிடம் சோறு பெற்றுண்பதைப் பெரும் பேறாகக் கருதி வருபவர். ஒருமுறை அவர் சுவாமிகளுக்கு அருகிலமர்ந்து உண்ணும் பாக்கியம் பெற்ற போது, இடையிடை சுவாமிகள் உண்ட இலையை உற்று நோக்கினார். சுவாமிகள் உண்டபின் இலையை வழித்து உச்சிட்டதை உண்ணவேண்டும் என்று உள்ளத்தெழுந்த உணர்ச்சிவயப்பட்டிருந்தார். அவரின் கருத்தைக் குறிப்பாலுணர்ந்த சுவாமிகள், தாம் உண்ட பின் இலையை மடித்து எடுத்துக்கொண்டு கிழக்கு நோக்கி, செம்மணிவரை நடந்து அங்கே ஒரு பாழ்ங் கிணற்றில் இலையை எறிந்தார். சுவாமிகள் கண்ணிற் படாமல் அவரைப் பின்தொடர்ந்த சீடர், கிணற்றில் குதித்து இலையை வழித்துத் தாம் நக்கிய பின், கைகால் கழுவி, விபூதி பூசி, ஒரு பூவரச மரத்தின்கீழ் தியானஞ் செய்ய அமர்ந்தார். அவர் இருந்தவாறே அங்கே சமாதியான செய்தி ஊரறிந்த உண்மை. அவரின் சமாதி இன்றும் செம்மணியருகில் வயல் வெளியில் மிகச் சிறிதாகக் கட்டப்பெற்றுள்ளது.

தொடரும்...

# சிவனை வழிபடுபவர்களுக்கிடையில் ஏற்றத் தாழ்வு கிடையாது யாவரும் சிவனடியார்களே

# அடியார் பெருமையின் ஆவண ஊற்று பெரியபுராணம்





சிவத்திரு.
பா.சிவமாதவன்
புதுக்கோட்டை

உலகில் பல்வேறு வகையான பண்பாட்டுப் பழக்க வழக்கங்கள் நிலவி வருகின்றன. அவற்றுள் தனிப்பெரும் சிறப்பாக திகழ்வது தமிழ்ப் பண்பாடாகும். தமக்கென சிறப்பான வழிபாட்டு முறைகளைப் பின்பற்றி வந்திருக்கின்றனர் தமிழர்கள். எனினும் இடையில் வந்து நுழைந்த ஆரியப்பரவல் தமிழ் நிலத்தின் மீதும், தமிழ் மக்களின் மீதும் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியிருக்கின்றது. அதாவது அது வரை ஒற்றுமையாக இருந்த தமிழ் மக்களை, சாதி என்னும் கொடிய விடமேற்றி பிரிவினையைக் கொண்டு சீர்குலைத்திருக்கின்றனர்.

ஆனால் சைவர்களாகிய தமிழர்களோ குல பேதமற்ற, எல்லா உயிர்களுக்கும் தனிப்பெரும் தலைவனாகிய சிவபெருமானை முழுமுதற்கடவுளாக வணங்கும் பேறு பெற்றவர்கள். சைவத்தில் வேறுபாடு என்பதே கிடையாது. யாரெல்லாம் சாதியச் சிந்தனையோடு சங்கரனை அணுகுகிறார்களோ அவர்களுக்கு எவ்விதப் பயனையும் அருள மாட்டான். மக்களிடம் பிறப்பின் அடிப்படையில் ஏற்றத் தாழ்வுகளைக் கற்பிக்கும் சாத்திர வெறியர்களை, அப்பர் பெருமான் பின்வருமாறு விளாசுகிறார்...

"சாத்தி ரம்பல பேசுஞ் சழக்கர்காள் கோத்தி ரமுங்கு லமுங்கொண் டென்செய்வீர்
பாத்தி ரஞ்சிவ மென்று பணிதிரேல் மாத்தி ரைக்குள் அருளுமாற் பேறரே"

எனவே கோத்திரமும் குலமும் இறைவனுக்கு கிடையாது. உயர்ந்த பிறப்பு, தாழ்ந்த பிறப்பு என்பது என்றுமே கிடையாது. அன்பொன்றே சிவனையடைவதற்கான சிறந்த வழி. இதனை அறுபான் மும்மை நாயன்மார்களின் வரலாற்றின் வாயிலாக பெரியபுராணம் தெளிவுபடுத்துகிறது.

அப்படியென்றால், இங்கு மிகப்பெரிய ஏற்றத்தாழ்வுகள் நிலவுகின்றனவே. அது உண்மை இல்லையா ? என கேட்டால், அக்கேள்விக்கு வள்ளுவன் வடிவாக பதில் தருகிறான்.

"பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும் சிறப்பொவ்வா
செய்தொழில் வேற்றுமை யான்."

எல்லா உயிர்களுக்கும் பிறப்பு ஒன்றுதான். செயல்பாடுகள்தான் மாறுபட்டிருக்கும். அதுமட்டுமின்றி, அந்த எல்லா உயிர்களுக்கும் தாயும், தந்தையும் சிவபெருமான்தான் என சுந்தரமூர்த்தி நாயனாரும் பாடுகிறார். அப்பாடல்

காயும் புலியி னதளுடையர் கண்டர் எண்டோட் கடவூரர்
தாயுந் தந்தை பல்லுயிர்க்குந் தாமே யாய தலைவனார்
பாயும் விடையொன் றதுவேறிப் பலிதேர்ந் துண்ணும் பரமேட்டி
பேய்கள் வாழும் மயானத்துப் பெரிய பெருமா னடிகளே – 7.5.3

வள்ளுவப் பெருமான் மற்றுமொரு குறளில் பெருமையும், சிறுமையும் அவரவர்களின் செயல்பாட்டினால் விளைவதென பின்வருமாறு விளக்குகிறார்.

"பெருமைக்கும் ஏனைச் சிறுமைக்கும் தத்தம்
கருமமே கட்டளைக் கல்"

எனவே பொதுமறையும் சரி, திருமுறையும் சரி ஒருபோதும் பிறப்பின் அடிப்படையில் கூறும் ஏற்றத் தாழ்வுகளை ஏற்பதில்லை என்பது உண்மை. இப்படியாக வள்ளுவனின் வாக்கையும் , திருமுறையின் உயிர்ப்பையும் உள்வாங்கி குன்றத்தூர் கோமகனார் தெய்வச்சேக்கிழார் பெருமான் சிவபரம்பொருளின் ஆணையை நிறைவேற்றினார். அதென்ன ஆணை? என்றால், இறைவனுக்கு மிகவும் பிடித்தவர்கள் அடியார் பெருமக்கள். அடியார் புகழை பாட வேண்டும் என்பதே அந்த ஆணை. அதற்காக இறைவனே "உலகெலாம்" என அடியெடுத்தும் கொடுத்தான்.

சரி வள்ளுவனின் வாக்கை உள்வாங்கியதன் விளைவைப் பற்றி கூறுங்களென, நினைப்பது புரிகிறது. இனி நாம் பெரியபுராணம் எப்படி ஏற்றத்தாழ்வுகளையும், சாதிய இரும்புக் கட்டமைப்புகளையும் தகர்த்தெறிந்தது என்பதை காண்போம்.

மக்கள் குழுக்களாக பிரிந்து, பல்வேறு தொழில்களை செய்து வந்தனர். அதனைக் குறிப்பிட்டு பெயர்களும் உருவாகின. வருணாசிரம வாதிகளோ, அப்பெயர்களைச் சாதிப்பெயர்களாக்கினர். தங்களை மேலானவர்களென்றும், ஏனையோரை தாழ்த்தியும் வரைமுறை செய்தனர். அதில் சிக்கித் தமிழினம் பிரிவினையாலும், ஏற்றத் தாழ்வுகளாலும், அடிமைத் தனத்தாலும் அலைக் கழிக்கப்பட்டது. இதனை வரலாறும் உறுதிசெய்யும். இறைவனை வழிபடுவதற்கானத் தகுதியும், பெருமையும் தங்களுக்கு மட்டுமே உள்ளதெனக்கூறி, இழி குலத்தாரெனப் பலரை ஒதுக்கினர். ஊருக்குள் நடந்து செல்லக்கூட அனுமதிக்கவில்லை.

இந்த கீழான எண்ணங்களைத் தகர்த்தெறியும் வகையில் சேக்கிழார் பெருமான், அதனை அப்படியே எடுத்துக் கொள்வார் போன்று அடியார்களின் குலப்பெயர்களைக் குறிப்பிட்டார். ஏன்? குலப்பெயர்களை பதிவு செய்ய வேண்டுமெனக் கேட்கலாம். அப்படிப் பதிவு செய்யாதிருந்தால் அத்தனை அடியார்களையும் மேல் சாதியினராகவே காட்டியிருப்பர் என்பதை நாம் அறிவோம்.

யாரையெல்லாம் கோயிலுக்குள் நுழைய விடாமல் தாழ்த்தி ஒடுக்கினார்களோ, அவ்வழி வந்த அடியார் பெருமக்களுக்குக் கோயிலினுள்ளே சிலை வைத்து வணங்க வைத்த அருஞ்செயலை சேக்கிழார் பெரியபுராணத்தின் மூலம் செய்திருக்கிறார். இது இறைவனின் விருப்பமுமாகும். அதாவது முள்ளை முள்ளால் எடுப்பது போன்று அதனை சாதித்து இருக்கிறார்.

அந்த வகையில் திருநீலகண்ட யாழ்ப்பாணர் பற்றி நாம் பார்ப்போம். திருநீலகண்ட யாழ்ப்பாணர், பாணர் குலத்தைச் சேர்ந்தவர். அதாவது, பறையர் குலம் என்பர். ஆளுடைய பிள்ளையாரின் பெருமைகளையறிந்து அவரைக் காண பாணரும், அவர்தம் மனைவியார் மதங்கசூளாமணியாரும் கழுமல வளநகரிற்கு வருகின்றனர். ஆளுடைய பிள்ளையார் அவ்விருவரையும் வரவேற்றச் செய்தியினை சேக்கிழார்ப் பின்வருமாறு காட்டுகிறார்.

"அளவிலா மகிழ்ச்சியினார் தமைநோக்கி ஐயர்நீர்
உளம்மகிழ இங்ணைந்த உறுதியுடை யோமென்றே
இளநிலா நகைமுகிழ்ப்ப இசைத்தவரை உடன்கொண்டு
களம்நிலவு நஞ்சணிந்தார் பாலணையவும் கவுணியனார். 2036"

ஆளுடைய பிள்ளையார் நீலகண்டப்பாணரை "ஐயர்" என அழைக்கிறார். இந்த இடத்தில்தான் சேக்கிழார் பெருமான், அக்காலகட்டத்தில் நிலவிய தீண்டாமையை காழிப் பிள்ளையார் ஆதரிக்காமல் சைவ நல்நெறியில் நின்றதைப் படமெடுத்துக் காட்டுகிறார். சீர்காழிப் பதியில் ஞானசம்பந்தருடைய சுற்றங்கள் யாவரும் சூழ்ந்திருக்கையில் தான், தாழ்த்தப்பட்ட குலமாகக் கருதப்பட்டு வந்த நீலகண்ட யாழ்ப்பாணரைப் பார்த்து "ஐயர்" எனக் குறிப்பிடுகிறார். அதுவும் மகிழ்ச்சியுடன் அழைக்கிறார். எனவே இறைவனுக்கு முன் யாவரும் சமம். பேதங்களைக் கொண்ட வேதங்களில் சிவம் இருப்பதுமில்லை. அவற்றிற்கு அருள் கொடுப்பதும் இல்லை என்பது திண்ணம். அதற்குப் பிறகு ஞானசம்பந்தர் எப்போதுமே, நீலகண்ட யாழ்ப்பாணரை, அவருடைய மனைவி யாரையும் தான் செல்லுமிடமெங்கும் அழைத்துக் கொண்டுப் போனார் என்பதை நாம் அறிவோம்.

ஒருமுறை சிவம்பெருக்கும் பிள்ளையார் சாத்தமங்கை நீல நக்க நாயனார் இல்லத்திற்கு அடியார்களுடன் எழுந்தருளினார். நாயனாரும் கூசி மிகக் குதுகுதுத்துக் கொண்டாடி உள்ளும் புறத்தும் முதிரன்பினால் வரவேற்று அமுது செய்விக்கச் செய்தார். அதன்பிறகு சம்பந்தப்பெருமான் நீலநக்கரிடம் எல்லோரையும் போலவே, பாணருக்கும் இந்த இல்லத்திலேயே பள்ளிகொள்ள ஓரிடம் அருள வேண்டுமென்று வேண்டுகிறார். அப்பாடல்

"நின்றஅன்பரை நீலகண்டப் பெரும்பாணர்க்கு
இன்று தங்கஓர் இடங்கொடுத்து அருளுவீர் என்ன
நன்றும் இன்புற்று நடுமனை வேதியின் பாங்கர்ச்
சென்று மற்றவர்க்கு இடங்கொடுத் தனர்திருமறையோர்."

மிக அற்புதமானச் செய்தியை நமக்கு இப்பாடல் விளக்குகிறது. நீலநக்கர் சிவஅந்தணர், நாளும் அயவந்தி நாதரை பூசனை செய்பவர். தம் இல்லத்திலேயே வேள்வி ஆற்றுபவர். வேள்வி செய்கின்ற இடத்தை மிகவும் தூய்மையானதெனக் கருதுவர். வேள்வியாற்றுபவர்கள் கூட அங்கு உறங்க மாட்டார்கள். அந்த இடத்தில்தான் நீலகண்ட யாழ்ப்பாணருக்கும், மதங்க சூளாமணியாருக்கும் மிகவும் இன்புற்று இடமளித்தார் நீல நக்க நாயனார்.

கவுணியர் குலத் தோன்றலோ ஐயர் என்கிறார். நீலநக்கரோ நடுமனை வேதியில் பள்ளிக்கொள்ள இடமளிக்கிறார். தீண்டாமை என்னும் பாவத்தை, எந்த அளவிற்கு இவ்விரு அடியார் பெருமக்களும் சுக்குநூறாக உடைய செய்திருக்கின்றனர் என்பதை நாம் நினைத்துப் பார்க்கும்போது , உள்ளம் உவகை கொள்கிறது. யாரிடமும் தீண்டாமையை பாராட்டக்கூடாது. முக்கியமாக அடியார் பெருமக்கள் அந்த பாவச் செயலை செய்யக் கூடாது என்பதை இதன் மூலம் நமக்கு அறிவுறுத்துகின்றனர்.

அதன்பிறகு அங்கு நடந்த அற்புதத்தை சேக்கிழார் கூறுகிறார். அப்பாடல்

"ஆங்கு வேதியில் அறாதசெந்தீ வலம்சுழிவுற்று
ஓங்கி முன்னையில் ஒருபடித் தன்றியே ஒளிரத்
தாங்கு நூலவர் மகிழ்வுறச் சடோக யாழ்த்தலைவர்
பாங்கு பாணியா ருடன்அரு ளால்பள்ளிக் கொண்டார். "

நடுமனை வேதியிலவர்கள் உறங்குகையில் வேள்விக் குண்டத்தில் முழுவதும் அணையாத செந்தீயானது ஓங்கி, வலப்புறமாக சுழித்து முன்னை விடவும் மிகச் சிறப்பாக ஒளிர்ந்தது. செந்தழல் போல்திரு மேனி உடையவர் சிவபெருமான் .

"செந்தழல் போல்திரு மேனித் தேவர்பிரான் வரக் கூவாய்" – திருவாசகம்

இங்கு தீண்டாமையை ஏற்காது, அன்பையேற்று நடைபெற்ற அற்புத செயல்களைச் சிவபெருமானே ஏற்றும், வாழ்த்தியும் அருள் செய்திருக்கிறார், என்பது இதனூடாக நமக்குத் தெரிகிறது. நிறைவாக திருஞானசம்பந்தப் பெருமான் முத்தி அடையும் சமயத்தில் , தன்னுடைய திருமணத்திற்கு வந்த அத்தனை மக்களையும் வேள்வித்தீ வாயிலாக முத்திபெற செய்தார். அதில் நீலகண்ட யாழ்ப்பாணரும் அடங்குவார். எனவே சாதிய ஏற்றத்தாழ்வுகளை அடியார் பெருமைகள் வாயிலாக அறிவித்து, அதனை அடியார்களைக் கொண்டே முறியடித்தப் பெருமை பெரிய புராணத்தையே சாரும். சிவபெருமானை அடையத் தேவையானது, அன்பே தவிர சாதிகள் இல்லை. என்னதான் இவர்கள் அதனை மறைத்து, வேறு விதமாக போலி பிம்பத்தை உருவாக்கினாலும் அது நிற்காது. உண்மையே என்றும் நிற்கும். எனவே அன்பே வடிவான சிவத்தை அன்பாலடைந்த அடியார் பெருமக்கள் வாயிலாக மிக அற்புதமான செய்திகளை பெரியபுராணம் நமக்கு வழங்கியிருக்கிறது. அதிலிந்த சாதிய முறியடிப்பும் அடங்கும். நாமும் அன்பு வழியில் நின்றால், நிச்சயம் இறையருள் கிட்டும். வேற்றுமை என்றுமே பார்க்கக்கூடாது. ஒன்றே குலம் ஒருவனே தேவன் என்ற செய்தியின் வாயிலாக மொத்த உயிர் கூட்டங்களுக்கும், ஒரே தலைவன் இறைவனே. எனவே ஏற்றத்தாழ்வுகள் அற்று இன்பமாக வாழ்வோம்! இறைவனை அடைவோம்!

"தென்னாடுடைய சிவனே போற்றி
எந்நாட்டவர்க்கும் இறைவா போற்றி"

## தென்னாட்டு ஆசிரியர் திண்ணை



சிவத்திரு.
திருவம்பலம் தென்னவன்



சிவத்திரு.
சிவ செந்தமிழாதன்



சிவத்திரு.
ஆறுமுகம் சிவநாதன்



சிவத்திரு.
யாழவன் சிவவேதன்



சிவத்திரு.வடிவேலு
கங்காளான்



சிவத்திரு.பாலுசாமி
சிவமாதவன்

# ஈசனைத் தேடிய தென்னாட்டுப் பயணம்
# பிள்ளைச்செல்வம் தரும் திருவெண்காடு



**தேவாரப் பாடல்பெற்ற காவிரித் தென்கரை சிவபுரங்களில் பதினொராவது திருக்கோயில்**

**அமைவிடம் :** (நாகப்பட்டினம் மாவட்டம் – தமிழ்நாடு)

சீர்காழியில் இருந்து பூம்புகார் செல்லும் வழித்தடத்தில், சீர்காழியில் இருந்து சுமார் 13 கி.மீ. தொலைவில் திருவெண்காடுத் தலம் இருக்கிறது. இங்கு தவம் செய்த இந்திரனின் வெள்ளை யானையாகிய ஐராவதத்தின் பெயரில் இருந்தே இத்தலத்தின் பெயர் இவ்வாறு வழங்கப்படுவதாகக் கூறப்படுகிறது. சீர்காழியில் இருந்து நகரப் பேருந்து வசதிகள் உண்டு. ஒன்பது கிரகத் தலங்களில் திருவெண்காடு புதன் தலமாக விளங்குகிறது. இங்கு சிவன் சுயம்பு மூர்த்தியாக அருள் வீசுகிறார். கல்வி, தொழிலுக்கு அதிபதியான புதனுக்கு தனி கோயில் உள்ளது.

### தலத்தின் சிறப்புக்கள்

கயாவில் பெருமாள் பாதம் உள்ளது போல, இக்கோவிலில் உள்ள சந்திர தீர்த்தம் அருகில் உள்ள ஆலமரத்தின் அடிப்பகுதியில் உருத்ரபாதம் இருக்கிறது. இங்கே சிவபெருமானின் திருவடிகள் வரையப்பட்டுள்ளன. இந்த ஆலமரத்தின் அருகில் நமது முன்னோர்களுக்கு திதி வழிபாடுகள் செய்தால் நல்ல பலன் கிடைக்கும். இருபத்தொரு தலைமுறையில் வருகின்ற பிதிர் சாபங்கள் நீங்கும். இது உருத்திரகயா என்றும் அழைக்கப்படுகிறது.

63 நாயன்மார்களில் ஒருவரான சிறுத்தொண்ட நாயனாரின் மனைவி திருவெணகாட்டு நங்கை பிறந்த தலம் என்ற சிறப்பும் திருவெண்காட்டிற்கு உண்டு. இங்குள்ள இறைவனை வழிபட்டால் நரம்பு சம்பந்தமான பிணிகள் குணமாகும். சிவனின் 64 வடிவங்களுள் ஒன்றான (43வது வடிவம்) அகோர மூர்த்தியை இத்தலத்தில் மட்டுமே காணலாம். இக்கோயில் சோழர்களால் கட்டப்பட்டது. அம்மனின் 51 சக்தி பீடங்களில் இது பிரணவ சக்தி பீடம் ஆகும். இத்தலத்தில் உள்ள மூர்த்திகள் மூன்று வெண்காட்டுநாதர், நடராசர் மற்றும் அகோரமூர்த்தி. இத்தலத்தில் உள்ள சக்திகள் மூன்று பண்மொய்த்த இன்மொழியாள் , காளிதேவி மற்றும் துர்க்கை. இத்தலத்தில் உள்ள திருக்குளங்களும் மூன்று சூரிய தீர்த்தம், சந்திர தீர்த்தம் மற்றும் அக்கினி தீர்த்தம். இத்தலத்தில் உள்ள கோவில் மரங்கள் மூன்று வடவால், வில்வம், மற்றும் கொன்றை. என்று மும்மூன்றாக அமையப்பெற்ற சிறப்பு இக்கோயிலுக்கு உள்ளது.

ஏழு விடங்கர் தலங்களில் திருவெண்காடும் ஒன்றாகும். வால்மீகி இராமாயணத்தில் இத்தலம் பற்றி குறிப்பிடப்பட்டுள்ளது. மேலும் சிலப்பதிகாரத்திலும் இத்தலம் பற்றி கூறப்பட்டுள்ளது. இத்தலத்தில் உள்ள துர்க்கை திருமுன்னும், காளி திருமுன்னும் மிகவும் முக்கியமானவை.

**இறைவன் திருப்பெயர் :** வெண்காட்டுநாதர் , வெண்காட்டப்பர் (சுவேதாரணியேசுவரர்)

**இறைவியார் திருப்பெயர் :** பண்மொய்த்த இன்மொழியாள், வேயனைய தோளுமை, (பிரமவித்யாம்பிகை, பிரம்மவித்யா நாயகி)

**கோவில்மரம் :** வடவால், கொன்றை, வில்வம்

**திருக்குளம் :** முக்குளம் (சூரியன், சந்திரன், அக்கினி)

**பாமாலை :** திருநாவுக்கரசர், திருஞானசம்பந்தர், சுந்தரர்

### தலத்தின் மீது பாடப்பட்ட தேவாரமுலிகளின் பதிகங்கள்

**திருஞானசம்பந்தர்**

**கண்காட்டு நுதலானும் கனல்காட்டும் கையானும்
பெண்காட்டும் உருவானும் பிறைகாட்டும் சடையானும்
பண்காட்டும் இசையானும் பயிர்காட்டும் புயலானும்
வெண்காட்டில் உறைவானும் விடைகாட்டும் கொடியானே.**

**திருநாவுக்கரசர்**

**பண் காட்டிப் படி ஆய தன் பத்தர்க்குக்
கண் காட்டி, கண்ணில் நின்ற மணி ஒக்கும்,
பெண் காட்டிப் பிறைச் சென்னி வைத்தான் திரு
வெண்காட்டை அடைந்து உய்(ம்), மட நெஞ்சமே!**

**சுந்தரமூர்த்திநாயனார்**

**படம் கொள் நாகம் சென்னி சேர்த்தி, பாய் புலித்தோல் அரையில் வீக்கி,
அடங்கலார் ஊர் எரியச் சீறி, அன்று மூவர்க்கு அருள் புரிந்தீர்
மடங்கலானைச் செற்று உகந்தீர் மனைகள் தோறும் தலை கை ஏந்தி
விடங்கர் ஆகித் திரிவது என்னே? வேலை சூழ் வெண்காடனீரே!**

### கோவில் வரலாறு

காசிக்கு சமமான தலங்கள் ஆறு. அதில் ஒன்று திருவெண்காடு. மற்றவை 1. திருவையாறு, 2. திருசாய்க்காடு (சாயாவனம்), 3. திருவிடைமருதூர், 4. திருவாஞ்சியம் 5. மயிலாடுதுறை என்பன அவை. சிவனின் அறுபத்து நான்கு வடிவங்களுள் ஒன்றான அகோர மூர்த்தியை இத்தலத்தில் மட்டுமே காணலாம்.

பிரம்மனிடம் பெற்ற வரத்தால் சலந்தரன் மகன் மருத்துவன் என்னும் அசுரன் தேவர்களுக்கு துன்பத்தை விளைவித்தான். சிவபெருமான் அருளியபடி தேவர்கள் வேற்றுருவில் திருவெண்காட்டில் வாழ்ந்து வந்தனர். அசுரன் திருவெண்காட்டிற்கு வந்தும் போர் செய்தான். அசுரன் சிவனை நோக்கி தவம் இருந்து சூலாயுதம் பெற்று தேவரை சூலத்தால் தாக்கி காயப்படுத்தினான். தேவர் சிவனிடம் முறையிட சிவன் கோபம் கொண்டார். அப்பொழுது அவருடைய ஐந்து முகங்களில் ஒன்றான ஈசான முகத்தினின்று அகோர மூர்த்தி தோன்றினார். இந்த அகோர உருவை கண்ட மாத்திரத்திலேயே அசுரன் சிவனிடம் சரணாகதி அடைந்து வணங்கினான். தென்னிந்தியாவின் மிகப் புகழ் பெற்ற சிறப்பு வாய்ந்த வழிபாட்டு தலமாக திருவெண்காடு மிளிர்கின்றது.

இங்கு நடராச சபையும், இரகசியமும் உண்டு. சிதம்பரத்தை போல நடராசருக்கு அருகில் பெருமாளுக்கும் தனித் திருமுன் உண்டு. இந்திரன், ஐராவதம், பெருமாள், சூரியன், சந்திரன், அக்கினி ஆகியோர் வழிபட்டுள்ளார்கள். அத்துடன் பட்டினத்தார் சிவதீக்கை பெற்றதும், மெய்கண்டார் அவதரித்ததும் இங்குதான். திருவெண்காடர், திருவெண்காட்டுத்





தேவர், திருவெண்காடையார், திருவெண்காடுடைய நாயனார், திருவெண்காட்டுப் பெருமான் ஆகிய பெயர்களும் இவருக்கு உண்டு. இங்குள்ள நடராசரை ஆடவல்லான் என்று கல்வெட்டு கூறுகிறது. இங்கும் சிதம்பரம் போன்றே நடராசர் சபை, படிக இலிங்கம், ரகசியம் அமைந்துள்ளது. படிக இலிங்கத்திற்கு தினமும் நான்கு முறை அபிசேகமும் நடராசருக்கு வருடத்திற்கு ஆறு முறை அபிசேகம் நடைபெறுகின்றன. இக்கோவிலின் தனிச்சிறப்புக்கு உரியவர் அகோர மூர்த்தி. சிவபெருமான் தன் பக்தர்கள் பொருட்டு 64 விதமான உருவங்களில் காட்சியளித்து வருகிறார். இவரது வீரக் கோலம் இங்கு சிறப்பாக இருக்கிறது. இது நாற்பத்தி மூன்றாவது உருவமாகும். பெயரில் சற்று கடுமையாக இருந்தாலும் அருள் நிலையில் சிறந்த மூர்த்தியாக உள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

### சிறப்பு வழிபாட்டு முறைகள்

திருவெண்காடு தலத்தில் புதனை வழிபட வருபவர்களில் சிலர் நேரிடையாக புதன் சன்னதிக்கே சென்று விடுகிறார்கள். இது தவறு. முதலில் சுவாமியையும், பிறகு அம்பாளையும் வழிபட்ட பிறகே இறுதியில் புதன் சன்னதிக்கு சென்று பூசைகள் மேற்கொள்ள வேண்டும்.

இத்திருக்கோயிலில் ஞாயிற்றுக் கிழமைகளில் இரவு பத்து மணிக்குமேல் (இரண்டாம் கால முடிவில்) அகோரமூர்த்திக்குச் சிறப்பு வழிபாடுகள் நடைபெறுகின்றன. திருவெண்காடு வருவோர், ஞாயிறு நாளாக அமைந்தால் அன்றிரவு தங்கி, இத்திருக்கோயிலில் இவ்வழிபாடு நடைபெறும் சரியான நேரத்தைக் கேட்டுத் தெரிந்துகொண்டு கட்டாயம் இவ்வழிபாட்டைப் பார்ப்பது சிறப்பு. இவ்வரலாற்றையொட்டிச் சுவாமி திருமுன்னுக்கு எதிரில் வெளியே உள்ள நந்தியின் உடம்பில் ஒன்பது துவாரங்கள் இருப்பதை இன்றும் காணலாம். சரணடைந்தவர்களைக் காப்பதில் இவருக்கு நிகர் இவரே. இத்தலத்தின் தன்னிகரில்லா தலைவி பண்மொய்த்த இன்மொழியாள். திருவெண்காடரின் சக்தி வடிவம் இவள். மாதங்க முனிவருக்கு மகளாகத் தோன்றி மாதங்கி என்ற பெயருடன் வெண்காட்டுநாதரை நோக்கித் தவம் இருந்து தன் கணவனாக பெற்றார். கல்வியில் சிறந்து விளங்க, மாணவர்கள் அம்பாளை தினசரி வழிபாடு செய்தால் பெரும் பயன் கிட்டும் என்பது யாவரும் அறிந்ததே. நான்கு திருக்கரங்களில் இடது மேற்கரத்தில் தாமரைப்பூ (செல்வச் செழிப்பு) வலது மேற்கரத்தில் அக்கமாலை (யோகம்) அணி செய்வதைக் காணலாம். கீழ்க்கரம் அபய கரம். இடது கீழ்கரம் திருவடிகளின் பெருமையை பேசுவதாகும். பணிந்தார் எவரும் தெய்வம் போல உயரலாம் என்பதாகும். பெருமை வாய்ந்த சக்தி பீடங்களுள் இதுவும் ஒன்றாகும்.

திருஞானசம்பந்தர் இத்தலத்தின் வட எல்லைக்கு வந்த போது அவருக்கு ஊரெல்லாம் சிவபுரமாகவும், மண் எல்லாம் சிவலிங்கங்களாகவும் தோன்றின. எனவே இத்தலத்தில் கால் வைக்கப் பயந்து “அம்மா” என்றழைத்தார். இவரது குரலைக்கேட்ட பெரியநாயகி இவரை தன் இடுப்பில் தூக்கிக் கொண்டு கோயிலுக்குள் வந்தார். சம்பந்தரை இடுப்பில் தாங்கிய வடிவில் பெரியநாயகியின் சிலை அம்மன் கோவிலின் சந்நிதியில் காட்சியளிக்கின்றது.

### புதனுக்குத் தனிச் சந்நதி

கல்விக்கு குருவான புதபகவான் அன்னை அறிவுடைநாயகி அரசாட்சிக்குட்பட்டவர் போன்றும் தாயின் அரவணைப்போடும் கூடி வீற்றிருக்கும் சேய் போன்றும் அன்னையர் கோயிலுக்கு இடது பாகத்தில் தன் கோயிலை அமைத்துக் கொண்டு அருள் பாலிக்கிறார்.

இத்தலத்தில் திருவெண்காடரை புதன் தன் ‘அலி’ குற்றம் நீங்கி ஒன்பது கோள்களில் ஒருவரானார் என்பது புராண வரலாறு. திருவெண்காடு ஒன்பது கோள்த் தலங்களில் மிகவும் புகழும் சிறப்பும் பெறக் காரணமாக அமைந்தவர். ஒன்பது கோள்களில் புதன் பகவான், கல்வி, அறிவு, பேச்சுத்திறமை, இசை, சோதிடம், கணிதம், சிற்பம், மருத்துவம், மொழிகளில் புலமை ஆகியவற்றை தரவல்லவர். இவருக்கு இத்தலத்தில் தனி திருமுன் உள்ளது. புதனின் தந்தையான சந்திரனின் திருமுன், சந்திர தீர்த்தமும், புதன் திருமுன்னுக்கு எதிரில் அமைந்துள்ளது. சாதகத்தில் புதன் சரியாக அமையாவிட்டால் பிள்ளைப்பலன் இருக்காது. அத்துடன் அறிவுக்குறைபாடும், நரம்புத்தளர்ச்சியும் ஏற்படும். இப்படி குறைபாடுகள் உள்ளவர்கள் இங்கு வந்து தீர்த்தத்தில் நீராடி புதன் பகவானை வழிபட்டால் இவ்வகையான குறைகள் நீங்கி பலன்களைப் பெறலாம். இசைக்கு அதிபதியான புதனை இசைக் கலைஞர்களும், திரைப்படக் கலைஞர்களும் வழிபட்டு பயன் பெறுகின்றனர். இது புதன் சிவபெருமானை பூசித்து பேறு பெற்ற தலம்.

### கோவில் அமைப்பு

சுமார் 12 ஏக்கர் நிலப்பரப்பில் இந்தக் கோயில் அமைந்திருக்கிறது. கோயிலைச் சுற்றி நான்கு தேரோடும் வீதிகள் உள்ளன. கோவில் உள்ளேயும் நான்கு வீதிகள் இருக்கின்றன. இந்தக் கோயிலுக்கு கிழக்கிலும் மேற்கிலும் வானுயர்ந்த கோபுரங்கள் உள்ளன. வெளிவீதியில் இருந்து உள்ளே செல்ல இரு கூடக் கோபுரங்கள் இருக்கின்றன. இக்கோயிலில் கண்டெடுக்கப்பட்ட கல்வெட்டுகளில் இருந்து அக்காலத்து சோழ மன்னர்கள் ஆதித்திய சோழன், இராசஇராச சோழன் ஆகியோர் பல தானங்களைச் இக்கோவிலுக்கு செய்திருப்பது தெரிய வருகிறது.

இங்குள்ள நடராச மூர்த்தியும் மிகுந்த கலை அழகு கொண்டது. சிதம்பரத்தில் உள்ளதைப் போன்றே இங்கும் நடராசர் சபைக்கு அருகில் திருமாலுக்கு சந்நிதி இருக்கிறது. மூலவரைப் போலவே உற்சவரும், நடப்பவர் ஒருவர் இடது காலை முன்வைத்து எப்படி வலது காலைப் பெயர்த்து அடியெடுத்து வைக்க முனைவாரோ அதே போல் பெருமான் தன் நடையழகைக் காட்டும் விதமாக உள்ளார் என்பது சிறப்பு.

கோவில் செல்வதற்கான உதவி மற்றும் மேலதிக விபரங்களை பெற்றுக்கொள்ள ஈசனைத் தேடிய தென்னாட்டுப் பயணக் கட்டுரை ஆசிரியரை தொடர்பு கொள்ளலாம்.

**சிவத்திரு.குமரேசன் இராஜசிம்மன்**
**உதவிப் பேராசிரியர்**
SRM **கலை மற்றும் அறிவியல் கல்லூரி**
**919003296221** - easanaithedi.in

# சைவப் பிள்ளைகளுக்கு ஆங்கிலக் கல்வியைக் கொடுத்து மதமாற்றத்தினை தடுக்க உருவாக்கிய பாடசாலையே யாழ்ப்பாணம் இந்து ஆரம்ப பாடசாலை



இலங்கைத் தீவு அந்நியர் ஆட்சிக்கு உட்பட்டிருந்த சமயத்தில் சைவமும் தமிழும் நலிவுறும் ஆபத்து உருவானது. அதிலிருந்து நம் மதத்தையும், மொழியையும் பேணிக் காத்து மேன்மையுறச் செய்யும் விடாமுயற்சியில் - விழிப்புணர்வு எழுச்சியில் - ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலரும் அவர் வழி வந்த நம் முன்னோர்களும் தீவிரமாக ஈடுபட்டனர். அதன் ஓர் அங்கமாக சைவபரிபாலன சபையின் நோக்கில் புலர்ந்ததுதான் இன்று போற்றுதலுக்குள்ளாகி நிற்கும் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி.

மிசனரிமார்களின் ஆங்கில மொழிக் கல்வியையும் அதனால் அரச உத்தியோகங்களையும் வாய்ப்புக்களை யும் பெறலாம் என்ற சாதக சூழலையும் பயன்படுத்தி மிசனரிமாரின் கிறிஸ்தவ மதத்துக்கு இந்துக்கள் மதம் மாறும் ஓர் அவல நிலைமை மோசமாக எழுந்தபோது அதினின்றும் நம் சமூகத்தைக் காப்பாற்றவும் இந்துக்கள் மதம் மாறுவதைத் தடுக்கவும் சைவசமயச் சூழலில் அந்த ஆங்கிலக் கல்வியைப் போதிக்கும் எத்தனமாக யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி போன்ற சுதேசிய கல்வி மையங்கள் 19ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் பரவலாக உருவாக்கப்பட்டன. யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி அந்த வகையில் முதன்மையானதாக உருவாயிற்று.

### பாடசாலையின் தோற்றம்

சைவச் சூழலில் ஆங்கில மொழிக் கல்வியைப் போதிக்கும் முனைப்போடு 1890 இல் உருவான யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி அதன் தொடக்குனர் களின் எதிர்பார்ப்புக்கு அமைய ஓங்கி வளர்ந்து. ஆரம்பத்தில் இருந்தே ஆங்கில மொழிமூல கல்விக்கும் சைவத்துக்கும் அரும்பணியாற்றியது. எனினும் ஆங்கில மொழிக் கல்விக்கு ஈடுகொடுக்க முடியாத சுதேசிய மக்களை கல்வித் துறையில் உயர்த்திவிடும் நோக்கில் இந்த நடைமுறைத் திட்டம் பயனளிக்கவில்லை என்பதை இந்துக் கல்லூரி நிர்வாகத்தினரும் - கல்லூ ரியை வழி நடாத்திய யாழ். இந்துக் கல்லூரிச் சபையினரும் உணர்ந்தபோதுதான் மாற்றுத் திட்டம் குறித்து அவர்கள் சிந்திக்கத் தலைப்பட்டனர் என்று கூறப்படுகின்றது. அந்தச் சிந்தைனையில் பிறந்ததுதான் யாழ்ப்பாணம் இந்து ஆரம்ப பாடசாலை.

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி நிர்வாகத்தை ஒட்டி, யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி வளாகத்தை அண்டிய நிலப்பரப்பிலேயே 18.01.1915 இல் இருந்து யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி தமிழ்ப் பாடசாலை என்ற பெயரில் இது இயங்கத் தொடங்கிற்று எனக் கூறப்படுகின்றது. அத்தகைய பதிவுகளே கடந்த சில தசாப்தங்களாக இப்பாடசாலையை ஒட்டி வெளியான நூல்கள், கையேடுகள், சஞ்சிகைகள், அறிக்கைகள் போன்றவற்றில் இடம்பிடித்துள்ளன. எனினும் இதுவரை அதற்கான சான்றாதாரங்கள் வெளிப்படை யாக முன்வைக்கப்படவோ, பதியப்படவோ இல்லை.

### இந்துக் கல்லூரி இயக்குநர் சபை

யாழ். இந்துக் கல்லூரி ஆரம்பித்து சரியாகக் கால் நூற்றாண்டு கழித்து யாழ். இந்துக் கல்லூரி என்ற தாய் மர நிழலில் யாழ். இந்துக் கல்லூரியில் அப்போது முன்னெடுக்கப்பட்ட ஆங்கில மொழிமூலமான கல்விக்கு ஈடுகொடுக்க முடியாத இந்தப் பிரதேச மாணவர்களின் நலனைக் கருத்தில் கொண்டு யாழ். இந்துக் கல்லூரி தமிழ்ப் பாடசாலை இயங்கத் தொடங்கியது. அச்சமயத்தில் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியின் நிர்வாகத்தின் கீழ் முற்றும் முழுதாக இப்பாடசாலை இயங்கிய போதிலும் அங்கு கற்பிக்கும் சிரேஷ்ட ஆசிரியர் ஒருவரே அதன் தலைமை உபாத்தியாயராகச் செயற்பட்டார்.

1941ஆம் ஆண்டு வரை நீண்டகாலமாக இப்பாடசாலையின் தலைமை ஆசிரியராகப் பணிபுரிந்த த.பொ.குழந்தைவேல் பற்றிய தகவல்கள் உள்ளன. எனினும் அவருக்கு முந்திய தலைமையாசிரியர்கள் பற்றிய பதிவுகள் இன்னும் அறியப்படவில்லை.

### தமிழ் கலவன் பாடசாலையாக மாற்றம்

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி உருவான பின்னர் - இருபதாம் நூற்றாண்டின் முற்பகுதியில் பெண்களுக்கான கல்வி பற்றிய விழிப்புணர்வும் நம் முன்னோர் மத்தியில் தீவிரம் பெறத் தொடங்கியது போது, அதற்கு வடிகாலமைக்கும் நோக்குடன் 05.03.1927 இல் இருந்து யாழ். இந்துக் கல்லூரி தமிழ்ப் பாடசாலை மகளிரையும் உள்ளீர்த்து யாழ். இந்துக் கல்லூரி தமிழ் கலவன் பாடசாலையாகத் தொழிற்படத் தொடங்கியது என பாடசாலைகள் பதிவுகள் எடுத்தியம்புகின்றன.

அக்காலகட்டத்தில் 1928 ஆம் ஆண்டளவில் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரிக்கு கிழக்குப் புறத்தே கல்லூரி ஒழுங்கைக்கும் கிழக்கே - தற்போது இந்துக் கல்லூரியின் மைதானமாக விளங்கும் திடலின் மேற்குப் பக்கத்தில் கொட்டகைகள் அமைக்கப்பட்டு அந்தக் கொட்டகை வகுப்புகளில் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி தமிழ் கலவன் பாடசாலை இயங்கியமை தலைமுறைகள் கடந்தும் வாய்மூலம் அறியப்பட்டு வந்த தகவலாக உள்ளது. அறுபதுகள் வரை யாழ்ப் பாணம் இந்துக் கல்லூரியில் ஆங்கில மொழி மூலக் கல்வியே பிரதானமாகத் தொடர, தமிழ்க் கலவன் பாடசாலையே முற்று முழுதாகத் தமிழ்மொழி மூலக் கல்வியைப் போதித்தமையினால் இது தமிழ் பள்ளிக்கூடம் என்ற சுருக்கப் பெயரினாலேயே ஆரம்பம் முதல் அறியப்பட்டு வந்தது என்பதும் கவனிக்கத்தக்கது.

### யாழ். இந்து மகளிர் பாடசாலை

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி தமிழ்க் கலவன் பாடசாலையில் பெண்களும் கற்கக்கூடிய நிலைமை இருந்தபோதிலும் மகளிருக்கென தனியான ஆங்கில மொழி மூலக் கல்வி மையம் வேண்டும் என்ற அவசியம் 40களில் உணரப்பட்டது. 1935 முதல் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியின் ஆங்கில மொழி மூலக் கல்விக்கு பெண்களும் உள்ளீர்க்கப்பட்டனர். எனினும், இச்சூழலில் இருந்த அத்தகைய மாணவிகள் அப்போதும் காத்திரமாக இயங்கிக்கொண்டிருந்த சுன்னாகம் இராமநாதன் கல்லூரியில் கற்பதற்கே பெரும்பாலும் வழிகாட்டப்பட்டனர். இதனால், பல பெற்றோர்களது வேண்டுகோளுக்கு அமைய யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரிச் சூழலில் பெண்களுக்கான ஆங்கிலமொழி மூல பாடசாலை அமைக்கும் திட்டம் முகாமைத்துவ சபையால் கருத்தில் கொள்ளப்பட்டது. இதன் விளைவாக யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி மைதானத்துக்கு எதிரே (கிழக்குப் புறத்தில் கஸ்தூ ரியார் வீதியில் இருந்த தனியாருக்குச் சொந்தமான பொன்னாலயம் என்ற பெயருடைய - நாற்சதுர வீட்டில் (இந்த வீடு இப்போது இடிக்கப்பட்டு விட்டது.) 1943ஆம் ஆண்டில் யாழ்ப்பாணம் இந்து மகளிர் கல்லூரி ஆரம்பிக்கப்பட்டது. அது பின்னர் 1945 ஆம் ஆண்டு தற்போதுள்ள இடத்துக்கு இடமாற்றம் செய்யப்பட்டது. யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியில் இருந்து யாழ்ப்பாணம் இந்துக் கல்லூ ரி தமிழ்க் கலவன் பாடசாலையும், அதிலிருந்து யாழ். இந்து மகளிர் கல்லூரியும், அதிலிருந்து யாழ். இந்து மகளிர் ஆரம்ப பாடசாலையும் ஆரம்பமாயின என்பது ஈண்டு குறிப்பிடத்தக்கது.

### அதிபர் க. முத்துக்குமாரு

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியை அண்டி, யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி தமிழ்க் கலவன் பாடசாலை செயற்பட்ட சமயத்தில் நீண்டகாலம் தலைமை ஆசிரியராக இருந்த த.பொ.குழந்தைவேல் 1941இல் மறைய அவரது இடத்துக்கு, 1930இல் இருந்து அதே பாடசாலையில் கற்பித்து வந்த கந்தையா முத்துக்குமாரு பதவியேற்றார். 1966 ஆம் ஆண்டு வரை, கால் நூற்றாண்டு காலம் பாடசாலையை வழிநடத்திய பெருமையுடையவர் இவர். இவரது காலத்தில்தான் பாடசாலை அதன் தற்போதைய இடத்துக்கு மாற்றம் கொண்டது. யாழ். இந்துக் கல்லூ ரி வளாகத்தை அண்டி தமிழ்க் கலவன் பாடசாலை இருந்தபோது, பாடசாலையின் கொட்டகைகளிலேயே சைவபரிபாலன சபையினர் ஏற்பாடு செய்த பல சைவமாநாடுகள் நடைபெற்றன. அவற்றை முன்னின்று நடாத்துவதில் அதிபர் முத்துக்குமாரு அதீத ஈடுபாடு காட்டினார். அதேவேளை பாடசாலையை அண்டிய கல்லூரி விளையாட்டு மைதான வளவில்தான் யாழ். இந்துக் கல்லூரி கட்டட நிதிக்காக கல்லூரியினால் அவ்வப்போது களியாட்ட விழாக்கள் நடத்தப்பட்டன. அவற்றின் வெற்றிக்காகவும் அதிபர் முத்துக்குமாரு பம்பரமாக உழைத்தார். அத்தகைய விழாவொன்றின் மத்தியில் இரவில் இடம்பெற்ற வானவேடிக்கையின் போது சிதறிய தீ துகள்கள் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி தமிழ்க் கலவன் பாடசாலையின் கொட்டகை மீது வீழ்ந்ததால் சில வகுப்பறைக் கொட்டகைகள் தளபாடங்களுடன் எரிந்து நாசமாகின என்ற செய்தியும் வாய்வழியாகப் பேசப்பட்டு வருகின்றது.

### பாடசாலை புதிய இடத்தில்

அதிபர் கந்தையா முத்துக்குமாரு, பிரதி அதிபர் மு.கணபதிப்பிள்ளை, யாழ்ப்பாணம் இந்துக் கல்லூ ரி நிர்வாக சபையின் தலைவர் சாண்டோ) திரு. முத்துச்சாமிப்பிள்ளை போன்றோரினதும் கல்லூரிச் சபை மற்றும் ஆரம்பப் பாடசாலை கல்விச் சமூகம் ஆகியவற்றினதும் ஒத்துழைப்புடன் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில், கொண்டலடிப் பிள்ளையார் கோயிலுக்குப் பக்கத்தில் தற்போது பாடசாலை அமைந்துள்ள இடத்தில் நிலம் கொள்வனவு செய்யப் பட்டது. அங்கு 17.08.1951 இல் புதிய கட்டடத்துக்கு அடிக்கல் நாட்டப்பட்டது. பாடசாலைச் சமூகத்தைச் சேர்ந்த பிரமுகர்கள் குடாநாடு எங்கும் ஊர் ஊராக அலைந்து நிதி சேர்த்தனர்.

பிரதி அதிபர் மு.கணபதிப்பிள்ளையே கட்டட வேலையை முன்னின்று கவனித்தார். சுமார் மூன்றாண்டு கால கடும் பிரயத்தனத்துக்கு மத்தியில் கட்டட வேலை பூர்த்தியாகி 22.01.1954 இல் பாடசாலை யாழ். இந்துக் கல்லூரி வளாகத்திலிருந்து இடம்பெயர்ந்து தற்போதைய களத்தில் இயங்கத் தொடங்கியது. தற்போது விளையாட்டு மைதானப் பிரதேசத்தை தவிர்த்து பாடசாலை அமைந்துள்ள வளாகத்தில் சுமார் அறுபது வீத நிலத்தையே அச்சமயம் பாடசாலை கொண்டிருந்தது. அதன் வடக்குப் புறம் உள்ள நிலப்பகுதி 90களின் நடுப்பகுதியில் மேலதிகமாகக் கொள்வனவு செய்யப்பட்டு பாடசாலையுடன் சேர்க்கப்பட்டதால் விஸ்தீரணம் அதிகரிக்கப்பட்டது.

ஐம்பதுகளின் நடுப்பகுதியில் அங்கு பாடசாலைகள் இயங்கத் தொடங்கிய போது அப்போதைய வளாகத்தின் வடக்கு எல்லை ஓரத்தில் சுமார் ஐந்து வகுப்பு அறைகளையும் அதிபர் அறையையும் அவற்றுக்கு அருகே நீண்ட நடைபாதையையும் கொண்ட ஒரே கட்டடத் தொகுதியே இருந்தது. மேற்புறம் கூரை ஓடு. அக்கட்டடத் தொகுதியின் எல்லையில் - வளாகத்தின் வடக்கு கிழக்கு மூலையில் கிணறு. கிழக்கு, மேற்கு எல்லை ஓரங்களில் நீண்ட கொட்டகைகள் அமைக்கப்பட்டு, தடுப்புக்களினால் வகுப்புகள் பிரிக்கப்பட்டிருந்தன. தென்மேற்கு எல்லையில் தெருவோரமாக கொண்டலடி விநாயகர் கோயில். ஐம்பதுகளில், பாடசாலை வளாகம் அமைந்திருந்த பிரதேசத்தில் உள்ள ஆரம்ப நிலை மாணவருக்கு கல்விக் கண்ணைத் திறந்துவிடும் தாயாக இப்பாடசாலை விளங்கியது. அதிபர் முத்துக்குமாருவும், பிரதி அதிபர் கணபதிப்பிள்ளையும் பாடசாலை கல்விச் சமூகத்தினரும் இப்பிரதேச மக்களுடன் நெருங்கி ஊடாடி, அவர்களது சிறார்களை பாடசாலையில் இணைத்து கல்வி ஊட்டுவதில் முனைப்புக்காட்டினர். அக்காலத்தில் ஆசிரியரை வாத்தியார் (உபாத்தியாயர்) என்றும் ஆசிரியையை அக்கர் என்றும் மாணவர்கள் விளிக்கும் நிலையே இருந்தது.

### பாடசாலை அரசுடைமையானது

1960களின் முற்பகுதியில் பாடசாலைகளை தேசிய மயமாக்கும் திட்டத்தின் கீழ் தனியார் நிர்வாகத்தில் இருந்த பாடசாலைகள், கல்லூரிகள் என்பன அவற்றின் சொத்துக்கள், ஆசிரியர்கள், மாணவர்கள் மற்றும் ஆளணியினருடன் அரசினால் பொறுப்பேற்கப்பட்டன. யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியும், அதனோடிணைந்த ஏனைய பாடசாலைகளும் கூட இதற்கு விதிவிலக்காக அமையவில்லை. அதுவரை காலமும் ஒரே பிரதேசத் துக்குள் யாழ். இந்துக் கல்லூரி இயக்குநர் சபை என்ற ஒரு முகாமைத்துவத்தின் கீழ் இயங்கி வந்த யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி, யாழ்ப்பாணம் இந்து

(11ஆம் பக்கம் பார்க்க)

## சைவப் பிள்ளைகளுக்கு...

(10ஆம் பக்கத் தொடர்ச்சி)

தமிழ்க் கலவன் பாடசாலை, யாழ். இந்து மகளிர் கல்லூரி என்பனவும் அரசால் தேசிய மயமாக்கப்பட்டு தனித்தனி பாடசாலைகளாகின. 06.04.1962 வர்த்த மானிப் பிரகடனத்தின் கீழ் யாழ். இந்து தமிழ்க் கலவன் பாடசாலை அரச பாடசாலையாக அறிவிக்கப்பட்டது.

### அதிபர்கள் நல்லதம்பி, சரவணமுத்து

சுமார் கால் நூற்றாண்டு காலம் கல்லூரியின் அதிபராக இருந்த க. முத்துக்குமாரு 1966 இல் ஒய்வு பெற இ.நல்லதம்பி அந்தப் பதவியை ஏற்றார். மூன்றாண்டுகளில் அவரும் ஓய்வுபெற அடுத்த மூன்று ஆண்டுகள் அதிபர் பதவியை செ. சரவணமுத்து ஆற்றினார்.

### யாழ். இந்துக் கல்லூரியுடன் இணைப்பு

1970களின் முற்பகுதியில் யாழ்ப்பாணம் இந்து தமிழ்க் கலவன் பாடசாலையை யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியுடன் இணைக்கவேண்டும் என்ற கோரிக்கை யாழ். இந்துக் கல்விச் சமூகத்தினரால் முன்வைக்கப் பட்டது. 1971 முற்பகுதியில் இரு கல்லூரிகளும் ஒன்றிணைக்கப்பட்டன. முழு நிர்வாகமும் யாழ். இந்துக் கல்லூரி அதிபரின் கீழ் வந்தது. அதுவரை யாழ். இந்து தமிழ்க் கலவன் பாடசாலையாக இயங்கி வந்த பாடசாலை யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியின் ஆரம்பப் பிரிவாக மாறியது. 1970 இறுதிவரை யாழ். இந்து தமிழ்க் கலவன் பாடசாலையில் 7ஆம் வகுப்பில் படித்து சித்தியடைந்த மாணவர்கள் அனைவரும் எதுவித நுழைவுத் தேர்வுமின்றி, அடுத்த ஆண்டில் 1971 ஜனவரியில் - எட்டாம் வகுப்புக்கு யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியில் உள்வாங்கப்பட்டனர்.

### அதிபர் க. தர்மலிங்கம்

ஆரம்பப் பிரிவுக்குப் பொறுப்பான ஆசிரியராக திரு.க.தர்மலிங்கம் செயற்பட்டார். எனினும் நிர்வாகத் தலைமை யாழ். இந்துக் கல்லூரி அதிபரிடமே இருந்தது. ஆரம்ப பாடசாலையிலிருந்து ஆசிரியர்கள் யாழ். இந்துக் கல்லூரிக்கும், யாழ். இந்துக் கல்லூரியிலிருந்து ஆரம்ப பாடசாலைக்கும் நேர அட்டவணைப்படி கற்பிக்க வந்து போயினர். சாரணியம், குருளைச் சாரணர் போன்ற அமைப்புகள் யாழ். இந்துக் கல்லூரியை ஒட்டி ஆரம்பப் பிரிவிலும் தொடங்கப்பட்டு ஒன்றிணைக்கப்பட்டு இயங்கின.

### அதிபர் கனகரட்ணத்தின் சகாப்தம்

1971 முதல் 1973 வரை சுமார் இரண்டரை ஆண்டுகள் ஆரம்பப் பாடசாலை பொறுப்பாசிரியராகக் கடமையாற்றிய க.தர்மலிங்கம் ஓய்வுபெற அந்த இடத்துக்கு செ.கனகரட்ணம் அதிபரானார். அடுத்து பன்னிரண்டு ஆண்டுகள் - 1985 வரை - அப்பதவியில் இருந்த அவரின் விடாமுயற்சி, தன்னலமற்ற சேவை, பாடசாலை சமூகத்தை ஒன்றிணைக்கும் வினைத்திறன் ஆகியவை காரணமாக பாடசாலையின் போக்கில் புதிய மலர்ச்சியும் உத்வேகமும் ஏற்பட்டன எனலாம். 1975 இல் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி அதிபராக இ.சபாலிங்கம் இருந்த சமயத்தில் யாழ். இந்துக் கல்லூரி ஆரம்பப் பிரிவின் மேம்பாடு கருதி அதனை மீண்டும் தனிப் பாடசாலையாக இயங்க அனுமதிக்கவேண்டும் என்ற கோரிக்கை பெற்றோராலும், ஆரம்பப் பிரிவு கல்விச் சமூகத்தினாலும் முன்வைக்கப்பட்டது. ஆரம்பப் பிரிவுப் பொறுப்பாசிரியர் செ.கனகரட்ணம் அந்த கடும் முயற்சியில் தீவிரமாக ஈடுபட்டார். அதன் பயனாக 21.01.1975 முதல் யாழ்ப்பாணம் இந்து ஆரம்ப பாடசாலை எனப் பெயர் சூட்டப்பட்டு, யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி நிர்வாகத்தினின்றும் பாடசாலை விடுபட்டு தனித்து இயங்கத் தொடங்கியது. 1971ஆம் ஆண்டு வரை முதலாம் வகுப்பு முதல் 7ஆம் வகுப்பு வரையான வகுப்பு கற்பித்தலைக் கொண்டிருந்த யாழ். இந்துக் கல்லூரி தமிழ்க் கலவன் பாடசாலை, அதன் பின் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியுடன் ஒன்றிணைக்கப்பட்டு, பின்னர் 1975 முற்பகுதியில் தனியாக யாழ்ப்பாணம் இந்து ஆரம்ப பாடசாலையாக இயங்க முற்பட்டது. அப்போது முதல் ஒன்று முதல் ஐந்தாம் தரம் வரையான வகுப்புகளை கொண்டு அது இயங்குகின்றது.

யாழ். இந்து ஆரம்ப பாடசாலையாக உருமாற்றம் பெற்ற பாடசாலைக்கு புதிய எழுச்சியை ஊட்டும் அத்திபாரத்தை அதிபர் கனகரட்ணம் முன்னெடுத்தார். பாடசாலையின் கல்வித்தரமும் பெறுபேறுகளும் தேசிய மட்டத்தில் மதிக்கப்படும் அளவுக்கு உயர்ந்தன. பாடசாலை வளாகத்தின் கிழக்கு எல்லையோரத்தில் முதலாவது இரட்டை மாடிக் கட்டடத்துக்கான அடிக்கல் 1976 இல் நாட்டப்பட்டது. 1985இல் அதிபர் கனகரட்ணம் ஓய்வுபெறுவதற்கு முன்னர் மேற்படி இரட்டை மாடிக் கட்டடம் உட்பட பல புதிய வகுப்ப றைத் தொகுதிகள் அமைக்கப்பட்டதுடன், கல்வித் தரத்துடன் பௌதீக வளங்களும் விஸ்தரிக்கப்பட்டன.

### அதிபர்கள் திருஞானசம்பந்தபிள்ளை, அரவிந்தநாதன்

1985 முதல் 1991 வரை மு.திருஞானசம்பந்தபிள்ளை அதிபராக பதவி வகித்த சமயத்தில் பாடசாலையின் கல்வித் தரம் தொடர்ந்து மேம்படுத்தப்பட்டது. 1991 இல் அவர் பணி ஓய்வுபெற, 1991 முதல் 1992 வரை ஆ.அரவிந்தநாதன் அதிபரானார். அவருடைய காலத்திலேயே 11.10.1992 அன்று யாழ். இந்து ஆரம்ப பாடசாலையின் பழைய மாணவர் சங்கம் அமைக்கப் பட்டது. இதன் மூலம், அடுத்த இரண்டரை தசாப்தங் களுக்கு பாடசாலையின் பௌதீக வளத்தையும் கல்வித் தர உயர்வுக்கான ஏனைய வசதிகளையும் உச்ச அளவில் ஏற்படுத்தித் தருவதற்கு வகை செய்யும் விதத்தில் பாடசாலை நிர்வாகம், அதிபர், ஆசிரியர்கள், பெற்றோர் கள், பழைய மாணவர்கள், நலன்விரும்பிகள், கல்விச் சமூகத்தினர் என அனைத்துத் தரப்பினரையும் ஒன்றிணைக்கும் சூழலும் உருவாயிற்று.

### அதிபர் தவராசா

1992 இறுதியில் அதிபரான கா.தவராசா இந்த நடவடிக்கைகளுக்கு வித்திடும் வகையில் மையப் புள்ளியாகச் செயற்பட்டார். இவரின் ஒன்றிணைப்பின் கீழ் பழைய மாணவர் சங்கமும் பாடசாலை அபிவிருத்திச் சங்கமும் ஐக்கியப்பட்டு செயற்பட்டு அடுத்த மூன்று ஆண்டுகளுக்குள் பாடசாலையின் வடக்கு எல்லையில் பாரிய காணியை பல லட்சம் ரூபா கொடுப்பனவில் கொள்வனவு செய்து பாடசாலையுடன் இணைக்கும் அருஞ்சாதனையை நிலைநாட்டியது. 1992ஆம் ஆண்டு வரை பாடசாலையின் நிலப்பரப்பு 2 றூட் 3 பேர்ச்சாக (சுமார் 8 பரப்பு 3 குளியாக) இருந்தது. அடுத்த இரண்டு ஆண்டுகளில் மூன்று கட்டங்களாக மேலும் ஒருறூட் 19 பேர்ச் (3பரப்பு 17 குழி நிலம் கொள்வனவு செய்யப்பட்டது. யாழ். குடாநாடு எதிர்கொண்ட மாபெரும் இடப் பெயர்வு, கொடூர யுத்தம் ஆகியவற்றுக்கு மத்தியிலும் இக்காலகட்டத்தில் புலமைப்பரிசில் பரீட்சைப் பெறுபேறுகள் உட்பட பல கல்விப் பாடச்செயற்றிட்டங்களிலும், இணைப் பாடவிதானங்களிலும் பாடசாலையின் அடைவு மட்டம் மேலும் உயர்ந்தது.

### அதிபர் ஞானகாந்தனின் பணி

1998 ஜனவரியில் அதிபர் தவராசா ஓய்வுபெற வே.ஞானகாந்தன் அதிபரானார். அடுத்த பன்னிரண்டு ஆண்டுகள் - 2010 ஜூன் வரை அவர் அதிபர் பதவியை நிர்வகித்தபோது தான் பாடசாலையின் பௌதீக வளங்கள் பெரும் விருத்தியைக் கண்டன. யுத்த நெருக் கடிகளுக்கு இடையிலும் பல்வேறு மாடிக்கட்டடங்கள், கணினிப் பயிற்சி வசதி, பாடசாலையில் மேடையுடன் கூடிய மண்டபம், நீர்த்தாங்கி, கம்பி வலையிட்டு அடைக்கப்பட்ட ஒழுங்கு முறையான வகுப்பறைகள், ஒழுங்கான மலசலகூட வசதிகள், நூலகம் போன்றவை ஏற்படுத்தப்பட்டன.

அதிபர் ஞானகாந்தனின் காலத்தில்தான் 2009ஆம் ஆண்டு பாடசாலையின் வடமேற்கு மூலை எல்லையில் அமைந்திருந்த எட்டரைப் பரப்புக் காணி பாடசாலை பழைய மாணவர் சங்கம், பாடசாலை அபிவிருத்திச் சங்கம் போன்றவற்றை இணைத்து உருவாக்கப்பட்ட பாடசாலைக் காணி கொள்வனவு அமைப்பு மூலம் ஒரு கோடியே அறுபது லட்சம் ரூபா செலவில் கொள்வனவு செய்யப்பட்டு பாடசாலை விளையாட்டு மைதானமாக இணைக்கப்பட்டது. இக்காலகட்டத்தில் கல்விச் செயற்பாடுகளும், புலமைப்பரிசில் பரீட்சை பெறுபேறுகளும் உச்சக் கட்டத்தை எட்டின எனலாம்.

### அதிபர் சு.தியாகலிங்கம்

அதிபர் ஞானகாந்தன் பதவியுயர்வுடன் இடமாற்றம் பெற்றுச் செல்ல அதுவரை நீண்டகாலம் உப அதிபராக பதவி வகித்த சு.தியாகலிங்கம் 2010 ஜூனில் அதிபர் பதவியை ஏற்றார். இவரது காலத்திலும் கல்விப் பெறுபேறுகளும் இணைப்பாட விதானச் செயற்பாடு களும் மேலும் முன்னேற்றம் கண்டன. கல்லூரியின் முன்னாள் அதிபர் செ.கனகரட்ணத்தின் உருவச்சிலை, பாடசாலையின் புதிய நுழைவாயில் வளைவு, சரஸ்வதி உருவச்சிலை, பூந்தோட்டம், அதில் உள்ள நீரேந்து அணங்கு உருவச்சிலை போன்றவை அமைக்கப்பட்டன. ஆசிரியர்களுக்கான சீருடை அறிமுகம் செய்யப்பட்டது. அதிபர் ஞானகாந்தன் காலத்தில் ஆரம்பிக்கப்பட்ட பல கட்டட வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டன. புதிதாகக் கொள்வனவு செய்யப்பட்டு பாடசாலையுடன் இணைக்கப்பட்ட மைதானத்துக்கு ஞானகாந்தன் விளையாட்டு மைதானம் என்று பெயர் சூட்டப்பட்டது. மூன்று வருட அதிபர் சேவையின் பின்னர் 2013 ஜூலையில் சு.தியாகலிங்கம் ஓய்வுபெற அந்த வருடம் ஜூலை முதல் ஒக்ரோபர் இறுதி வரை கி.தர்மஜீலன் பதில் அதிபராகப் பணிபுரிந்தார்.

### அதிபர் மகேந்திரராஜா

இதன் பின்னர் 2013 ஒக்ரோபர் இறுதியில் மகேந்திரராஜா அதிபராக நியமனம் பெற்று பதவியேற்றார்.இவரது காலத்தில், இம்முறை, தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை பெறுபேற்றில் சாதனைப் பாடசாலைகள் தரவரிசையில் தேசிய ரீதியில் தமிழ் மொழி மூலமான பாடசாலைகளில் 2ஆம் நிலையை நமது பாடசாலை எட்டி இருப்பது நமக்கெல்லாம் சிறப்பைத் தரும் ஒரு செய்தியாகும்.

1992 வரை சுமார் 8 பரப்பாக இருந்த பாடசாலை வளாகம் இப்போது மேலும் சுமார் 14 பரப்பால் அதிகரிக்கப்பட்டு சுமார் 22 பரப்பாக உயர்ந்துள்ளது. கட்டட வசதிகள் தாராளமாக உயர்ந்துள்ளன. பௌதீக வளங்கள் சிறப்பு மேலோங்கி உள்ளன. ஒரு சில நூறு மாணவர்கள் மட்டுமே கல்வி பயிலும் பாடசாலையாக பல தசாப்தங்கள் நீடித்த நிலைமை மாறி இப்போது அது ஆயிரத்து நானூறைத் தாண்டியுள்ளது. அதுபோல புலமைப்பரிசில் பெறுபேறுகளிலும் ஏனைய பாட விதானச் செயற்பாடுகளிலும் பாடசாலை தேசிய ரீதியில் முன்மாதிரியானதாக உயர்ந்திருக்கின்றது. இவை அனைத்துக்குமாக பாடசாலை சமூகத்தை இலங் கைத் தமிழர்கள் - குறிப்பாக யாழ் சைவத் தமிழ் மக்கள் - என்றும் நன்றியுடன் பாராட்டுவர் என்பதுதிண்ணம்.

### தற்போதைய அதிபர் பேரம்பலம் தனபாலசிங்கம்

நூற்று ஆறாவது ஆண்டில் கால்பதிக்கும், இந்த ஆண்டு (2021) தை மாதம் பதவியேற்ற புதிய அதிபர் சிவத்திரு.பேரம்பலம் தனபாலசிங்கம் அவர்கள், கொக்குவில் இந்து ஆரம்ப பாடசாலையில் இருந்து மாற்றலாகி இங்கு வந்துள்ளார். இவரின் காலமும் மற்றவர்களைப் போல் மிளிரும் என்பதில் ஐயமில்லை. அத்துடன் பாடசாலையை உருவாக்கிய நோக்கத்துடன் சைவத்தினையும் தமிழையும் வளர்க்கும் படிநிலைகளில் இவர் பயணிப்பார் என்று திடமாக நம்புவோம்.

**ந.வித்தியாதரன்**
**(நூற்றாண்டு விழா மலரில் இருந்து)**



## அன்புருவாகிய...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அன்பின் மிகுதியால் சிவலிங்கப் பூசனை இயற்ற விரும்பும் இவர்களுக்கு வேண்டுவது பூவும், நீரும், போற்றிப் பாடல் களுமே என்கின்றார் திருமூலர்.

"புண்ணியம் செய்வார்க்குப் பூவுண்டு நீருண்டு,
அண்ணல் அதுகண்டு அருள்புரியா நிற்கும்,
எண்ணிலி பாவிகள் எம்மிறை ஈசனை,
நண் அறியாமல் நழுவு கின்றார்களே" என்று குறிப்பிடுகின்றார்.

சிவவழிபாடு வழிபாடு இல்லங்கள் தோறும் இயற்றுவதற்கு வேண்டுவது உண்மையான அன்புதான். சாத்திரங்கள், கோத்திரங் கள் மற்றும் குலங்கள் என்பன முதன்மையானவை அல்ல என்பதனை திருநாவுக்கரசு அடிகள் பின்வருமாறு குறிப்பிடுகிறார்.

"சாத்திரங்கள் பல பேசும் சழக்கர்காள்,
கோத்திரமும் குலமும் கொண்டு என் செய்வீர்,
பாத்திரம் சிவம் என்று பணிந்திரேல்,
மாத்திரைக்குள் அருளும் மால் பேறரே"

செந்தமிழர், தமிழ் வேதியர், தமிழ்ப் புலவர், கலை வல்லுநர், நல்லொழுக்கம் மிக்கவர், பண்பாட்டில் சிறந்தவர், நல்ல துறவிகள், செவ்வியுடை பெரியவர்கள், சிவப்பூசனை செய்கின்ற ஊராகத் திருவீழிமிழலை அமைந்திருக்கின்றது என்று திருஞானசம்பந்தரும் (திரு:3:20:பாடல்:4) குறிப்பிடுகின்றார்.

சிவ சிவ என்கிலர் தீவினை யாளர்
சிவ சிவ என்றிடத் தீவினை மாளும்
சிவ சிவ என்றிடத் தேவரும் ஆவர்
சிவ சிவ என்னச் சிவகதி தானே - திருமந்திரம்

சங்கநிதி பதுமநிதி இரண்டும் தந்து , தரணியொடு வானாளத் தருபவர் எங்கள் சிவபெருமானே. குபேரனுக்கு செல்வத்தினை கொடுத்தவரும் சிவபெருமானே. ஐம்பூதங்களுக்கு ஆற்றலைக் கொடுத்தவர், அருக்கனில் சோதியை வைத்தவர், நிலவுக்கு ஒளியைத் தந்தவர், பிரமனைப் படைத்தவர், திருமாலுக்கு காக்கும் தொழிலைக் கொடுத்து உள்நின்று இயக்குபவர், ஏன் எங்களை இந்தப் பிறவிப்பிணியில் இருந்து கழற்றி பேரின்பப் பெருவாழ் வினைத் தருபவர் எங்கள் ஈசனே. அப்படிப்பட்ட ஈசனை வீட்டில் வைத்து வணங்கக்கூடாது என்று சொல்பவர்கள் தேனின் சுவைதெரியாமல் நாக்கின் நரம்பை இழந்தவர்கள். அதுபோல சிவத்தினை அனுபவிக்கத் தெரியாதவர்களின் அறிவற்ற கூற்றே சிவம் பயங்கரமானது என்பது. இவற்றையெல்லாம் புறந்தள்ளி இனியாவது உள்ளன்புடன் சிவத்தினை, சிவலிங்கத்தினை வீட்டில் வைத்து வணங்கி வாருங்கள் நிச்சயம் வாழ்வு மிகுத்து வரும். இவற்றையெல்லாம் புறந்தள்ளி இனியாவது உள்ளன்புடன் சிவத்தினை, சிவலிங்கத்தினை வீட்டில் வைத்து வணங்கி வாருங்கள் நிச்சயம் வாழ்வு மிகுத்து வரும். சிவபெருமானை எல்லா இடத்தி லும், குறிப்பாக வீட்டில் வைத்து வழிபட்டால் கல்வி, செல்வம், திருமணம் அமைதல், பிள்ளைச்செல்வம், மகிழ்ச்சியான வாழ்வு, நீண்ட ஆயுள்கிடைக்கும்என்பதற்கு பலதிருமுறைச்சான்றுகள்உள்ளன.

நிச்சயம் வாழ்வில் நல்ல மாற்றங்கள் தெரியும். ஆகமம் ஆகி நின்று அண்ணிப்பான் தாள் வாழ்க என்ற வரிகளில் குறிப்பிட்டது போல் அவனே ஆகமமாகி உங்களை அண்ணித்து அதாவது உங்கள் அருகில் வந்து அருள்புரிவான்.

## "மகாசிவனிரவு"...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விழித்திருந்து ஈசனை நினைத்து பூசை வழிபாடுகள் மேற்கொள்வார்கள். அதற்குப் பிறகு ஓய்வு எடுப்பார்கள். இவ்வாறாக சிவனிரவில் பூசையினை மாமாங்க வழிமுறையாக செய்து வந்து 12வது மாதம் வருகிற மகாசிவனிரவில் (சூரியன் சந்திரனின் வீட்டுக்கு எட்டாவது வீட்டில் வரும் காலம்,மாசித் திங்கள்) அன்று இரவு முழுவதும் கண்விழித்து ஈசனை மனதில் நிறுத்தி சிவபூசையினைச் செய்து மாமாங்க பூசையினை நிறைவு செய்வார்கள் சிவனடியார்கள்.

மகாசிவனிரவு அன்று அடியார்கள் விரதமிருந்து, நான்கு சாமங்களும் கண்விழித்து, சிவபூசை செய்து, சிவனுக்கு மங்கல நீராட்டி, தூபம்தீபம் காட்டி, சிவ சிந்தனையில் திளைத்து, தேவாரத் திருமுறைகள், சிவபுராணம், கீர்த்தித் திரு வகவல், திருவண்டப்பகுதி, போற்றித்திரு வகவல் போன்ற திருப்பாடல்களைப் பாடி, சிவன்கோவிகளுக்கு சென்று வழிபட்டு காளியாட்டம் இல்லது திருவருள் துணை யுடன் அருள்வேண்டி வழிபடுவதே சாலச் சிறப்பு.

# உள்ளங்கவர் கள்வனின் உறைவிடங்கள்



பசுபதிநாத் சிவன்கோயில் - நேபாளம்



திருஆலவாய் - மதுரை




ஆகாயத்தலம் - சிதம்பரம்

உலகின் முதற் சிவன்கோயில் - உத்தரகோசமங்கை



## அண்ணாமலையை நினைத்தாலே முத்தி



அக்கினித்தலம் - திருவண்ணாமலை

தென்னாடு செந்தமிழாகம சிவமடம் மற்றும் சைவ மாணவர் சபையின் ஐந்தாவது திங்கள் செய்தியிதழ் “தென்னாடு” சிவத்திரு. சிவஞானம் ஜெயானந்தன் அவர்களால் வடிவமைக்கப்பட்டு அச்சிடப்பட்டு கும்பம் நல்லோரை மாசித் திங்கள் 15ம் நாள் நிறைமதி அன்று (27-02-2021 சனிக்கிழமை) தென்னாட்டில் வெளியிடப்பட்டது. முதலாம் தமிழ்ச் சங்கம் கண்ட தென்னாடு என்பதை மனதில் நிறுத்தி , தென்னாடு செய்தியிதழையும் இயன்றளவு பிறமொழிக் கலப்பின்றி தெய்வத்தமிழில் தர முயற்சிக்கிறோம்.

தொடர்பு: குளங்கரை ஒழுங்கை, கொக்குவில் கிழக்கு, கொக்குவில் , யாழ்ப்பாணம். தொலைபேசி +94 21 221 2739 | மின்னஞ்சல் thennavan@thennadu.org